

# உலகளாவிய உயர் குறள்

இரா. இளங்குமரனார்

அமிழ்தம் பதிப்பகம்

# உலகளாவிய உயர் குறள்

செந்தமிழ் அந்தணர்

இரா. இளங்குமரனார்

அமிழ்தம் பதிப்பகம்

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | **உலகளாவிய உயர் குறள்** |
| ஆசிரியர் | **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாளர் | இ. வளர்மதி |
| முதல் பதிப்பு | 2004 |
| தாள் | 11.6 வெள்ளை மேப்லித்தோ |
| அளவு | 1/16 கிரௌன் |
| எழுத்து | 12 புள்ளி |
| பக்கம் | 6 + 82 = 88 |
| படிகள் | 1000 |
| விலை | உரு. **40** |
| நூலாக்கம் | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | அமுதோன் |
| அச்சு | வெங்கடேசுவரா ஆப்செட்<br>20 அஜீஸ் முல்க் 5வது தெரு<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| கட்டமைப்பு | இயல்பு |
| வெளியீடு | **அமிழ்தம் பதிப்பகம்,**<br>எ4, மாதவ் குடியிருப்பு,<br>5, டாக்டர் தாமசு சாலை,<br>தியாகராயர் நகர், சென்னை - 17<br>தொ.பே : 5518 3162 |
| நூல்கள் கிடைக்குமிடம் | **தமிழ்மண் பதிப்பகம்,**<br>2 சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 17<br>தொ.பே : 5538 9712 |

# உலகளாவிய உயர் குறள்

திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகளாக எட்டினைக் கொண்ட சுவடி இது. இதன் நிறைவுக் கட்டுரை **உலகளாவிய உயர்குறள்** என்பது. அதுவே சுவடித் தலைப்பு ஆயது.

தீரா அழிவையும் தீர்த்துவைக்கும் திறம் அறிவுக்கு உண்டு என்பதன் விளக்கம் முதல் கட்டுரை.

வையகம் வளம் பெற்றுச் சிறப்பது வறுமையின் உழைப்புக் கொடையாலேயே என்பதை நிலை நாட்டுவது இரண்டாம் கட்டுரை.

பொய் பொய்யே அன்றி மெய்யன்று. வள்ளுவர் பொய்யை மெய்யாகக் கூறினார் அல்லர் என்பது மூன்றாம் கட்டுரை.

தீய நட்பு தீ செய்யாத கேட்டையும் திட்டமாகச் செய்யும் என்பதைத் தெளிவிப்பது நான்காம் கட்டுரை.

பயனெதிர் பாராமை என்பதும் பயன் எதிர் பார்த்தலே என்பதும், பற்றறுத்தல் என்பதும் பற்றே என்பதும் ஐந்தாம் ஆறாம் கட்டுரைகள். ஏழாம் கட்டுரை தொல்காப்பிய வழியது வள்ளுவம் என்பதை நிறுவுவது. கட்டுரைகள் எட்டும் கட்டமைந்த திறத்த வேயாம். இதனை வெளியிட்டுதவும் அமிழ்தம் பதிப்பக உரிமையாளர் திருவாட்டி இ.வளர்மதியர்க்கு மிகுந்த நன்றியுடையேன்.

அன்பன்

**இரா. இளங்குமரன்**

# பதிப்புரை

"ஆய்வு, ஆராய்வு இரண்டும் பழந்தமிழ்ச் சொற்கள். ஆய்வு என்பது பொதுமக்கள் வழக்கில் உள்ள சொல். கீரை யாய்தல், கொத்தவரை ஆய்தல் என்பவை கீரையிலும், கொத்தவரையிலும் கொள்ளுவ கொண்டு, தள்ளுவ தள்ளலாம் செயற்பாட்டைக் குறிப்பதே.

ஆய்தம் ஓர் எழுத்து. தமிழ் எழுத்துகளிலேயே நுண்ணிய ஒலியுடையது ஆய்தமாகும். அந்த ஆய்த ஒலியினும் குறுகிய ஒலியுடையது ஆய்தக் குறுக்கமாகும். ஆதலால், ஆசிரியர் தொல்காப்பியர் "ஆய்தம் என்பது உள்ளதன் நுணுக்கம்" என்று கூறியுள்ளார். இவ்வாறு ஆய்வு பற்றி விரிவாக ஆழமாக ஆய்ந்து சொல்பவர் அரிய பெரிய ஆய்வுகள் பலவற்றை வழங்கியுள்ள ஐயா இளங்குமரனார், ஆய்வாளர்கள் அத்துறையில் ஆழப் பதியவும், அகல உழவும், எண்ணிய அரிய ஆய்வுகள் பலவற்றைப் பல்வேறு நூல்களாக வெளியிட்டுள்ளார்.

திருக்குறள் தொடர்பாக மட்டும் நாலாயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட அறுபது நூல்களைச் செய்தவர். பழந்தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுகளை மேற்கொண் டவர். புதுத் தமிழ் வளர்ப்பாளி, கலைச்சொல்லாக்கி. இளைய தலைமுறைக்கான தேவைகளை உணர்ந்து அவர்களின் வாழ்வைப் பண்படுத்தத் தக்க நூல்களை தம் வாழ்நாள் முழுதும் ஓயாது, ஒழியாது ஆக்கி வருபவர். அவர்தம் படைப்புகள் பலவற்றையும் ஒருங்கு திரட்டி ஒரே வேளையில் பற்பல சுவடிகளாக '**அமிழ்தம் பதிப்பகம்**' வழங்கும் வாய்ப்பை எண்ணி மட்டிலாத

மகிழ்ச்சி அடைகிறது. மேலும் மேலும் ஆய்வாளர்களுக்கு அருந்துணை புரியும் அந்நூல்களை வெளியிட விரும்பிக் காத்திருக்கிறது.

இந்நூல்கள் தமிழ்மொழியின் மரபையும், பரப்பையும் புலப்படச் செய்வன. ஊரும், உலகமும் சொந்தம் கொண்டாடத்தக்கன. இப் பெரும்புலவரின் நூல்களைக் கற்பதின்வழி பண்பாடு காக்கும் படிப்பாளிகளாக, தமிழர் பெருமையை நிலைநிறுத்தும் தலைவர்களாக உருவாக முடியும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடுகளாக தனித் தமிழ் நடையில் இந்நூல்களை வெளியிட்டுள்ளோம். தமிழின் மூலப் புதையல்களை மணமிக்க மலர்களாக கொடுத்துள்ளோம்.

கற்கின்ற இருபாலீர்
 தமிழ்நாட்டின் கண்ணொப்பீர்
  கனியி ருக்க
நிற்கின்ற நெடுமரத்தில்
 காய்கவர நினையாதீர்
  மூது ணர்வால்
முற்கண்ட எவற்றினுக்கும்
 முதலான நந்தமிழை
  இகழ்த லின்றிக்
கற்கண்டாய் நினைத்தின்பம்
 கைக்கொண்டு வாழ்ந்திடுவீர்
  நன்றே என்றும்.

எனும் **பாவேந்தர்** வரிகளை நெஞ்சில் நிறுத்துவீர்!

**- பதிப்பாளர்**

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | உலகளாவிய உயர்குறள் | iii |
| | பதிப்புரை | iv |
| 1. | காக்கும் கருவி அறிவே | 1 |
| 2. | வறுமையும் வளமையே | 11 |
| 3. | பொய் மெய்யாகுமா? | 20 |
| 4. | தீ நட்பு | 31 |
| 5. | பயனெதிர் பாராமையும் பயனே | 41 |
| 6. | பற்றறுத்தலும் பற்றே | 47 |
| 7. | காமத்துப்பால் காமசூத்திர வழிவந்ததா? | 52 |
| 8. | உலகளாவிய உயர் குறள் | 59 |

# 1. காக்கும் கருவி அறிவே

*"அறிவு அற்றம் காக்கும் கருவி"*

அறிவு வியப்பான ஒரு பொருள்; புதிது புதிதாகத் தோன்றிப் பொலிவு செய்யும் பொருள். நேற்றுக் கண்ட அறிவு, இன்று காணும் அறிவின் முன், குன்றிப்போய் விடுகின்றது. நாளைக் காணும் அறிவுக்கு இன்று கண்ட அறிவு, தோல்வி கண்டு விடுகின்றது அறிவு நாளும் நாளும் வளர்கிறது; வளம் பெருக்குகிறது; அதற்கு முன்னிருந்த அறிவை வென்று, அதனை அறியாமை யாக்கி விடுகிறது.

ஒன்றைப் புதிதாக அறியும் போது, அதுவரை அதனை அறியாத, 'நம் அறியாமை' நமக்குப் புலப்படும். 'இந்த எளியதையும் இதுவரை அறியாமல் இருந்தோமே' என்று நமக்கு நாமே இரக்கம் செலுத்த நேரிடும். அந்நிலையில்

*"அறிதோறும் அறியாமை கண்டற்று"*

என்னும் அறிவின் இலக்கணம் புலப்படும்.

ஏறத்தாழ 3000 நாள்களுக்கு மேல் சிறைச்சாலை யில் இருந்தவர் நேரு பெருமகனார். சிறைச்சாலையில் இருந்த நாள்களில் ஓய்வு ஒழிவு இல்லாமல் நூல் களைப் படித்தார்; நூல்களும் எழுதினார். அந்நிலை யில், "நான் எவ்வளவு அறியாமை யுடையவனாக இருந்திருக்கிறேன் என்பதை அறிய அறியத்தான் அறிந்து கொண்டேன்" என்றார்.

சிந்தனைச் சிற்பியாகவும் மாமேதையாகவும் விளங்கியவர் சாக்கிரடீசு. சிந்திப்பதிலும் நூல்களைத் தேடித் தேடிக் கற்பதிலும் பேரார்வம் கொண்டவர் அவர். "எவராவது ஒரு நூலைக் காட்டினால் போதும்; புல்லைக் காட்டியபோது அதனைத் தின்னுவதற்கு விரைந்து செல்லும் மாட்டைப் போல, நூலைக் கற்க ஆவலோடு திரிகின்றேன்" என்றார் அவர். அவரே ஒரு முறை, "எனக்கு ஒன்றே ஒன்று தான் தெரியும்; அந்த ஒன்றும் எதுவுமே எனக்குத் தெரியாது என்பது தான்" என்றார்!

அவர் நஞ்சினைப் பருகிக் கொண்டிருந்தபோது ஓர் அருமையான பாடல் ஒலிக்கக் கேட்டார். உடனே பக்கத்தில் இருந்த நண்பர் ஒருவரை அனுப்பி, அந்தப் பாடலை எழுதிக் கொண்டுவரக் கூறினார். அந்த நண்பரோ திகைப்படைந்து, "இப்பொழுதுமா அந்த ஆவல்" என்றார். "ஆம்! போவதே போகிறேன்; இன்னொன்றையும் தெரிந்துகொண்டு போகலாமே என்பதுதான் என் ஆவல்" என்றார் சாக்கிரடீசு. அறி தோறும் அறியாமையாக்கும் அறிவின் விந்தைநிலை இது! அறிவு நுண்மையானது; விரிவானது; ஆழ மானது. அதனால் இம்முத்தன்மைகளும் பொருந்த நுண்மாண் நுழைபுலம் எனப்படும். அறிவுக்குரிய இம்மூன்று தன்மைகளையும் இறைமையாகக் கண்டார் மாணிக்க வாசகர். அதனால் இறைவனை ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே என்றார். இரண்டையும் உணர்ந்த சான்றோர் 'அறிவே கடவுள்' என்றனர்.

அறிவுடையவரால் உலகம் அடைந்துவரும் நன்மைகளுக்கு அளவே இல்லை. அதனால்,

***"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த***
***மக்கட்பே றல்ல பிற"*** (61)

என்றார் வள்ளுவர். அவரே மக்கள் அறிவறிந்தவர் களாக இருப்பதுடன் பழிப்புக்கு இடமாகாதவர்களாக வும் இருக்க வேண்டும் என்றார். அத்தகைய மக்கள், ஒரு வீட்டிற்கு உரிமைப் பட்டவர்களாயினும், நாட்டிற் கும் உலகிற்கும் நன்மையும் பெருமையும் சேர்ப்ப வர்கள் ஆவர் என்றார்.

***"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து***
***வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"***

என்று இவ்வுண்மையை வெளியிட்டார் பாரதியார்.

ஒரு 'வள்ளலார்' பிறந்தார். அதனால். உலக மெல்லாம் உய்யத் தக்க 'சமரச சன்மார்க்கம்' என்னும் ஒரு பெருநெறி உலகுக்கு வாய்த்தது.

ஒரு 'புத்தர்' பிறந்தார். எதனையும் அப்படியே நம்பிவிடாமல் பகுத்தறிந்து பார் என ஓர் அறிவியக் கத்தைக் கண்டார்.

'காந்தியடிகள்' தோன்றினார்; 'இன்னா செய் யாமை' என்னும் ஓர் உயர் கொள்கை உலகுக்கு வாய்த்தது.

எடிசன், நியூட்டன், மார்கோனி, ரைட் உடன் பிறந்தார், சர். சி. வி. இராமன் முதலிய அறிவியல் அறிஞர்கள் தோன்றினர். அவர்களால் உலகங் கண்டறியா நலங்களை யெல்லாம் காண்பதாயிற்று. இதனால் தான்,

***"அறிவுடையார் எல்லாம் உடையார்"***

என்னும் பெருமை அறிவுக்கு வாய்த்தது.

அறிவுடையவர்கள், வந்தது கொண்டு, வர இருப்பதை அறிவர். தீமை ஒன்று வருதற்கு முன்னரே, அதனை அறிந்து, அத்தீமை வராதவாறு தடுத்து விடுவர். ஆதலால்,

அறிவுடையார் ஆவது அறிவார் என்றும், வருமுன்னர்க் காப்பார் என்றும், எதிரதா அறிவார் என்றும், ஐயுணர்வுக்கு மேற்பட்ட மெய்யுணர்வாளர் அவர் என்றும், ஐயப்பாடு இல்லாமல் அகத்தில் உள்ளதை அறியவல்லவர் என்றும், அவர்களுக்கு வையகத்தினைப் பார்க்கிலும் வானகம் பக்கத்தில் இருப்பதுபோல் இருக்கும் என்றும் திருவள்ளுவர் கூறுவார்.

அறிவுடையவர் மனம்போன போக்கில் போகார். ஐம்பொறிகளும் மதயானைபோல் கிளர்ந்தாலும், குரங்குபோல் தாவினாலும் அறிவுகொண்டு அடக்கு வர்; செல்ல வேண்டும் வழியில் செலுத்துவர். குண்டு குழி, மேடு பள்ளம், தக்க வழி தகாவழி, விரைவு மெது என்பவற்றை யெல்லாம் அறிந்து செலுத்தும் வண்டி யோட்டிபோல, அறிவும் தக்க வழியில் செலுத்தும். எந்தக் கேடும் தீமையும் வராமல் ஆக்கமும் நன்மையும் ஏற்படும் வகையிலேயே, பொறிகளைச் செலுத்தும். இதனை,

> ***"சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ***
> ***நன்றின்பால் உய்ப்பது அறிவு"*** (422)

என்றார் திருவள்ளுவர்.

மனத்தைப் போன போக்கில் போகவிடாமை, தீய வழியில் இருந்து விலக்குதல், நல்லவழியில் செலுத்து

தல் என்னும் மும்முகக் கடமைகளையும் ஒருமுகமாகச் செய்கின்றது அறிவு.

அறிவு என்பதற்கு 'உரன்' என்பதொருபெயர்; அவ்வுரனே தோட்டி என்னும் அங்குசம் போன்றது. அதனால் "உரன் என்னும் தோட்டியால் ஓரைந்தும் காத்தல்" என்று கூறுவர்.

ஓர் ஓட்டினுள் நான்கு கால்களையும் ஒரு தலையையும் சுருக்கிக் கொள்ளும் ஆமைபோல, ஓரறிவுத் திறத்தால் ஐந்து பொறிகளையும் காத்தல் உயர்வினுள் எல்லாம் உயர்வாகும் என்பர்.

அறிவது அறிந்து அடக்கிக் காக்கும் அறிவு, தனக்குத் தீமை வருவதை முற்கூட்டியே அறிந்து வரவிடாமல் தடுப்பதுடன், தன்னைப் போலவே பிறரையும், பிற உயிர்களையும் கருதும் படியும் செய்யும். தான் துன்புற விரும்பாமை போல, மற்றை உயிர் களுக்குத் தானும் துன்பம் செய்யாது. பிறர் துன்பம் ஒருகால் செய்யினும் தடுக்கவும் செய்யும். அவ்வாறு செய்தலே அறிவின், நிறைவின் அடையாளமாகும். அதனால் தான்

***"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்***
***தந்நோய்போல் போற்றாக் கடை"*** (315)

என்று திருக்குறள் பேசிற்று. இதனினும் மேலே ஒரு படி சென்று,

***"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய***
***செறுவார்க்கும் செய்யா விடல்"*** (203)

என்றும் கூறிற்று. தீமை புரிந்து அழிக்க வருவார்க்கும், அதனைத் திருப்பிச் செய்யாமல் விடுவதே, அறிவினுள்

எல்லாம் தலையான அறிவாகும் என்பது இதனால் விளங்கும்.

இத்தகைய சீரிய கூரிய நலமிக்க அறிவை, ஓர் அரிய காவற் கருவியாகக் காட்டுவதே "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்பதாகும்.

அற்றம் என்பது அழிவு, முடிவு, சிதைவு, கேடு என்னும் பலபொருள்களைத் தரும் சொல். 'உடனே' என்னும் பொருளும் 'சூழ்ச்சி' என்னும் பொருளும் தருவதும் உண்டு. இவ்வெல்லாப் பொருளும் பொருந்த நிற்கும் தொடர்,

**"அறிவு அற்றம் காக்கும் கருவி"**

என்பதாம். "அறிவு, பிறர் செய்யும் அழிவு கேடு ஆகியவற்றை வராமல் காக்கும்; வேறு சூழ்ச்சிகளையும் தடுத்துக் காக்கும்; அதையும் உடனுக்கு உடனாகவும் காக்கும்" என்றெல்லாம் பொருள் தருவதாகும் இது.

பழங்காலத்தில் போர்க்குச் சென்ற வீரர்கள், கையில் கேடயம் என்னும் கருவியை வைத்துப் பகைவர் செலுத்தும் அம்பு, வாள், வேல் ஆகியவற்றைத்தடுத்துக் காத்துக் கொண்டனர்.

மெய்ம்மறை எனப்படும் கவசத்தை அணிந்தும் காத்துக் கொண்டனர். இந்நாளில் குண்டு துளைக்காத உடைகளும் வண்டிகளும் மேடைகளும் அமைத்தலை யும், அணிதலையும் காண்கிறோமே! இவை எப்படி அழிவைத் தடுத்துக் காக்கும் கருவிகளாக இருக்கின் றனவோ, அப்படிக் காக்கும் தன்மையது அறிவு ஆகும். இக் கருவிகளும் அறிவு கண்ட அறிவுக் கருவிகள் தாமே!

'கருவி' என்று அறிவைக் கூறிய அளவில் நில்லாமல் 'அரண்' என்றும் கூறப்படுகிறது. அது,

> ***"அறிவு அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்***
> ***உள்ளழிக்க லாகா அரண்"*** (421)

என்பதாகும். பகைவரும் உட்புகுந்து அழிக்க முடியாத கோட்டையும் அறிவே ஆகும் என்று மேலும் கூறுகிறது. கோட்டைகள் பல வுண்டு. புறக்கோட்டை, அகக் கோட்டை, அகத்துள் அகக்கோட்டை என்றெல்லாம் உண்டு. ஐந்து கோட்டை, ஏழுகோட்டை, என்பனவும் உண்டு. அவற்றுள் உள்ளுள் கோட்டை எவராலும் புகவோ, அழிக்கவோ கூடாத பாதுகாப்புடையதாக இருக்கும். ஆதலால், "உள்ளழிக்க லாகா அரண்" என்று கூறப்பட்டதாம்.

இவற்றால் எந்தப் பாதுகாப்புக் கருவிகளினும் அறிவே மிகச்சிறந்த பாதுகாப்புக் கருவி என்பதும், எந்தப் பாதுகாப்புக் கோட்டையினும் அறிவே மிகச் சிறந்த பாதுகாப்புக் கோட்டை என்பதும் புலப்படும்.

இந்திய நாட்டின்மேல் பாகித்தான் படையெடுத்த நேரம். ஓர் இடத்தில் அப்படை நம் நாட்டின் உட் புகுந்தது. எல்லை கடந்து உட்புகுந்து ஒருபாலத்தை யும் தாண்டி படைஞரும், ஊர்திகளும் படைக்கலங் களும் தடுப்பாரில்லாமல் தலைகால் தெரியாத வெற்றிக்களிப்பில் வந்தனர். அவர்கள் பெருவரவாக உட்புகுந்தது நம் படைவீரர்க்கோ, படைத்தலைவர் கட்கோ தெரியாதது இல்லை. அப்போது தலைமை யமைச்சராக இருந்தவர் இந்திரா அம்மையார். அவரும் அறிந்தே இருந்தார்.

"பகைவர் படைகளும் ஊர்திகளும் தடையின்றி வேண்டுமளவும் வரவிட்டு விலகிக் கொள்க" என்று ஆணை தந்தனர் நம் படைக்கு. அப்படைகள் பெரு வாரியாகப் புகுந்த அளவில் சுற்றிவளைத்துக் கொண்டு பாலத்தைத் தகர்த்து விட ஆணை இட்டனர். அச் செயல் எண்ணற்ற பகைப்படைஞரைப் பற்றிக் கொள்ள வும், அவர்கள் கருவிகளையும் ஊர்திகளையும் தடுத்துக் கொள்ளவும் செய்து, அவர்களுக்குப் பெருந் தோல்வியைத் தந்து போரை ஒருமுடிவுக்குக் கொண்டு வந்தது. இத் துணிவான நடவடிக்கை எடுத்தவர் இந்திரா காந்தியார்.

***"அறிவு அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்***
***உள்ளழிக்க லாகா அரண்"*** (421)

என்னும் இரண்டையும் தெளிவாக்கும் ஒரு சான்று இது.

ஒரு கிணற்றுமேடு; அதன்மேல் ஒருவர் நிற்கிறார்; அவரை நோக்கி யானை ஒன்று வருகிறது தாக்குவதற்கு; அவர்க்கு எதிர்ப்புறம் இருந்து புலி ஒன்று பாய்ந்து வருகிறது. இரண்டையும் பார்த்த அவர், ஒரு நொடிப் பொழுது அளவில் அக்கிணற்றை ஒட்டியிருந்த ஆலமரத்தின் விழுதைப் பற்றிக் கொண்டு கிணற்றுள் இறங்குகிறார்; அங்கே பாழ்ங்கிணறு தெரிகின்றது; ஒரு பாம்பு படமெடுத்து ஆடுகின்றது; கிணற்றுள் இறங்காமல் கிணற்று உட் சுவரில் நின்று கொள்கிறார். மேட்டில் யானையும் புலியும் தாக்கி மடிகின்றன. பாம்பு புடைக்குள் புகுகின்றது; விழுதைப்பற்றிக் கொண்டிருந்தவர் வெளியேறிப் போகிறார். இது கல்கியார் படைத்துக் காட்டிய புனைகாட்சி. அறிவு அற்றம் காக்கும் கருவி என்பதைத் தெளிவாக்குவது.

பெண்யானை ஒன்று இரைதேடிச் சென்றது. யானையைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட புதைகுழி இருப்பதை அறியாமல் அதன்மேல் பரப்பப் பட்ட அதிமதுரத் தழையைத் தின்னும் ஆவலால் செல்கின்றது. கால் வைத்த அளவில் பொய்யாக மூடப் பட்ட அக்குழிக்குள் வீழ்ந்து விடுகின்றது. வெளியேற முடியாமல் ஓங்கிப் பிளிறுகின்றது.

பெண்யானையின் பிளிறலைக் கேட்ட ஆண் யானை ஓட்டமாக ஒலிவந்த பக்கத்தை நோக்கி ஓடி வந்தது; நேரிட்டது என்ன என்பதை எண்ணியது. அதனை வெளிக்கொண்டுவரும் ஆர்வத்தால் உள்ளே பாய்ந்து விடவில்லை! மேட்டிலே நின்று காடும் மலையும் எதிரொலிக்க முழங்கியது. ஓட்டம் ஓட்ட மாக யானைக் கூட்டங்கள் வந்தன. மேட்டின் மேல் நின்று காலால் ஓங்கி ஓங்கி ஒவ்வொன்றும் மிதித்தன. குழியில் மேட்டுமண் சரிந்து வழியுண்டாகியது. பெண் யானை தானே மேடேறியமையைக் கண்ட களிப்பில் யானைக் கூட்டம் மண்ணை அள்ளி எறிந்து மகிழ்வு கூர்ந்தன. அறிவு அற்றம் காக்கும் கருவி என்பதை மத யானைக் காட்சியாலே மாந்தருக்கு அறிவுறுத்திய அருமையுடைய இது, அகநானூற்றில் உள்ள ஒரு படைப்பாகும்.

ஒருவர் மின்சாரத்தாக்குதலுக்கு ஆட்பட்டால், அவரைக் காக்கும் ஆவலால் அவரைப் பற்றின் பற்றியவரும் தப்பமாட்டார். ஆனால் உடனே மின் தொடர்பைத் துண்டித்தால் மின்தாக்கமுற்றவரைக் காத்தவர் ஆவார். அறிவு அற்றம் காக்கும் கருவி என்பதற்குச் சான்றும் ஆவார்.

திடுமென்று மழைபெய்தது; அது இரவுப் பொழுது; ஒரு சிறிய வீடு இருந்தது; "மழை பெய்கிறது; ஒதுங்க இடம் வேண்டும்" என்றார் மழைக்கு ஆட் பட்டவர். வீட்டினுள் இருந்து, "ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்" என ஒலிவந்தது. உள்ளே சென் றார்; படுத்திருந்தவர் எழுந்தார்; இருவரும் இருந்து கொண்டனர். பின்னே ஒரு குரல் கேட்டது; "மழை பெய்கிறது; ஒதுங்க இடம் வேண்டும்" என்று. உள்ளே இருந்து மீண்டும், "ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்க லாம்; மூவர் நிற்கலாம்" என்று குரல்வந்தது. மூவரும் நின்றனர். இது முதலாழ்வார்கள் எனப்படும் பொய் கையார், பூதத்தார், பேயார் சந்தித்துக் கொண்ட சந்திப்பு என்பது வரலாறு. இப்பொழுது போகும் மக்கட்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாமல் போனால் உலகப் பரப்பெல்லாம் படுக்கவும் இருக்கவும் போதா மல் நிற்கும் நிலைக்கு ஆட்படலாம். அதனால் கரு வாயில் அடைக்கக் கதவு வேண்டும் என்றார் பாவேந்தர். அது உலகுக்கெல்லாம் அறைகூவல் விடுக்கப்பட்ட அற்றம் காக்கும் கருவியாகும்; உள்ளழிக்க லாகா அரணுமாகும்.

## 2. வறுமையும் வளமையே

*"கேட்டினும் உண்டு ஓர் உறுதி"*

கேடு என்பது கெடுதல் அழிவு சிதைவு இறப்பு குறைவு வறுமை துன்பம் தீமை முதலிய பலபொருள்தரும் ஒருசொல். இப்பொருள்கள் எல்லாமும் ஒன்றை ஒன்று தழுவி வருவனவேயாம். கெடு, கெடுதி, கெடுதல், கெடுதலை, கெடும்பு என்பனவும் இப்பொருள் வழிப் பட்ட சொற்களே.

கேடு என்பதற்குப் பெருக்கம் என்பதும் ஆக்கம் என்பதும் எதிர்ச் சொற்களாகத் திருக்குறளில் ஆளப் பட்டுள.

*"கேடும் பெருக்கமும் இல்லல்ல"* (115)

*"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும்"* (169)

என்பவை அவை. இக்கேடுகள் வறுமை என்னும் பொருள் தருதல் வெளிப்படை. இவ்வறுமை இன்மை, நல்குரவு, நிரப்பு என்னும் சொற்களாலும் திருக்குறளில் ஆளப்படும்.

இன்மை எனப்படும் வறுமையின் கொடுமைக்கு உவமை கூற வேண்டுமானால், 'தனக்கு ஒப்பு தானே' என்னும் நிலையில், இன்மைக்கு இன்மையே ஒப்பாகும் என்று கூறுவார் வள்ளுவர்.

*"இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது"* (1041)

என்பது அது.

இருப்பவற்றையும் கூட இல்லையாகச் செய்ய வல்லது வறுமையாதலால் இன்மை எனப்பட்டது. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்னும் திருவள்ளுவர் (247) "பொருளல்லவரையும் பொரு ளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்" (75) என்றும் கூறுகிறாரே. இவை இன்மையை நேர்வகை யிலும் எதிர் வகையிலும் விளக்குவன அல்லவா!

உயிருள்ள காலத்தேயன்றி ஒருவர் இறந்த பின்னரும் கூட இன்மை அவர் வழியினர்க்கு ஆக்கம் செய்யாத தாகும் என்கிறாரே! (1042)

வறுமை அவரை மட்டுமா கெடுக்கும்? அவர் குடிப்பிறப்பையும் அதன் சிறப்பையும் கூடக் கெடுத்து விடும் என்கிறாரே! (1043)

நற்குடிப்பிறந்தாரிடத்தும் வறுமை உண்டாகு மானால் தம் குடிப்பிறப்புக்கு ஒவ்வா இழிசொல் சொல்லி வாழும் நிலையும் உண்டாகிவிடுமாமே! (1044)

எவ்வளவு தான் நல்ல பொருள்களை நன்றாக உணர்ந்து சொல்லும் திறம் பெற்றிருப்பினும் வறிய ராயின் அவர் சொல்லும் பொருளும் பாராட்டப் படுவ தில்லையாமே! (1046)

முறை கேடாக ஒருவன் அடையும் வறுமை அவனைப் பெற்ற அன்னையால் கூடத் தன் மகன் என்று கொள்ளாமல் அயலான் போலக் கருத வைக்குமாமே! (1047)

"இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன் றெடுத்த தாய்வேண்டாள் என்று பிறரும் சொல்வரே! (நல்வழி)

இப்பொருளின்மை எத்தனை எத்தனை இன்மை களை யெல்லாம் செய்து விடுகின்றது! வறுமைக்கு, இன்மை என்று வழங்கப்பட்ட பெயர் எத்தகைய பொருத்தமிக்கது!

"நேற்றுக் கொன்று விட்டுச் சென்றதே அந்த வறுமை இன்றும் வருமோ" என்று கண்ணுறக்கம் இல்லாமல், வந்த வறுமை கொண்டு, வாரா வறுமைக் குப் புலம்புகின்றானாம் வறியவன். (1048)

அவனுக்கு உறக்கம் ஏன் வரவில்லையாம்?

"நெருப்புக்குள் உறங்க முடியுமாயினும் நிரப்பு என்னும் வறுமைக்குள் ஒருவன் கண்ணைமூட முடியுமா?" என வள்ளுவர் உள்ளம் வருந்தியுரைக்கின்றது. (1049)

இவ்வறுமை என்ன, உலகம் அறியாத ஒன்றா? மண்ணின் மேடு பள்ளங்கள் போல, வளமையும் வறுமையும் எங்கும் நிரம்பித் தானே கிடக்கின்றன? அதனால் வறுமையையும் வளமையையும் எண்ணும் வள்ளுவர்,

**"கேடும் பெருக்கமும் இல்லல்ல"**

எனத் தெளிந்துரைக்கிறார். (115)

கேடும் பெருக்கமும் இல்லாதவை அல்ல எனினும் அவை இருந்தே ஆக வேண்டுவன அல்ல; பேரறிவாளராலும், நயனுடையராலும், பெருந்தகையினராலும், கடனறி காட்சியினராலும், கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டினராலும், வேளாண்மை மிக்காராலும் மாற்றியமைக்கத் தக்கனவே என்பது வள்ளுவரின் ஒப்புரவு உள்ளமாகும். அதனைக் கடைப் பிடியாகக் கொள்ள முயலாதவராய் அவர் இரார்.

இருப்பின், அவர் உயிரிரக்க முடையவர் ஆகமாட்டார். ஏன்? அவர் உயிரோடு உலவுபவரே எனினும் உயிரற்ற வராகவே கொள்ளப்படுவார் என்கிறார்.

***"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்***
***செத்தாருள் வைக்கப் படும்"*** (214)

என்பது அவ்வள்ளுவம் (214)

இனி அல்லோனிடம் செல்வம் இருத்தலும், நல்லோனிடம் வறுமை இருத்தலும் கூடக் காண் கிறோமே எனின் அத்தோற்றம் மெய்த் தோற்றம் அன்று; சீராக எண்ணிப் பார்த்தால் உண்மை புலப்படும் என்பார். அது,

***"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்***
***கேடும் நினைக்கப் படும்"*** (169)

என்பது.

அவ்விய நெஞ்சத்தான் என்பான் பொறாமை யாளன்; செவ்வியான் என்பான் நேரிய நிறை நெஞ்சத் தான். முன்னவன் எவ்வளவு செல்வம் சேர்த்தாலும் போதாது போதாது என்னும் வறுமை நெஞ்சத்தவ னாகவே இருப்பான். பின்னவன் எவ்வளவு சிறிய வாய்ப்பு எனினும் அதனைப் பெரிதாக எண்ணி நிறை வடைவான். ஆதலால் வெளித் தோற்றம் கொண்டு முடிவுக்கு வராமல், உள்ளகம் உணர்ந்து முடிவெடுக்கத் தக்கது என்பாராய் எண்ணப்படும் என்றார்.

நல்லோன் ஒருவன், தான் வறுமைப்பட்டதாக எண்ணுவதே இல்லை. எண்ணாத அவனை வறுமை வருத்தப்படுத்திவிட முடியுமா? முடியாது. ஆனால் அவன் பட்ட வறுமையால், அவன் பிறர்க்கு உதவ வேண்டும் என்று எண்ணும் உதவிச் செயல்கள் அவன்

எண்ணியவாறே செய்து முடிக்க முடிவதில்லை. அவ்வாறு செய்து முடிக்க முடியவில்லையே என்ற வருத்தம் மட்டும் அவனுக்கு இருக்கும். (219)

கடன்பட்டும் கூட உதவிக் கடன் செய்ய வேண்டும் என்று எண்ணுபவனுக்கு உள்ளவை உரியவற்றையெல்லாம் விற்றும், ஏன்? தன்னை விற்றும் கூடப் பிறர்க்குக் கட்டாயமாக வேண்டிய உதவியைச் செய்ய இருப்பவனுக்கு வறுமைத் துயர், அவனைப் பொறுத்த அளவில் - ஒரு பொருட்டானதாக இருக்குமா? (218, 220)

வறுமையை வறுமையாக எண்ணாத பெருந்தன்மையனுக்கு, இவன் அழிவழியால் கெட்டான்; செய்யக்கூடாதன செய்து கெட்டான்; ஊக்கமின்றிச் சோம்பிக் கிடந்து உழையானாய் உள்ளவை இழந்தான் என்று உலகம் பேசும் பழிகள் உண்டாகுமா?

பெற்றாளையும், பிறனாகக் கருதவைக்கும் அறஞ்சாரா வறுமை போன்றதா இந்நல்லோன் பெற்ற வறுமை? இல்லையே!

அதனால்,

**"கெடுவாக வையாது உலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு"** (117)

என்றார் வள்ளுவர்.

நடுவு நிலைமையைப் போற்றி நல்வழியிலே நடப்பவனுக்குக் கேடு வராது; அப்படி ஒரு வேளை வரும் எனின் அதனைச் சான்றோர் பழித்துச் சொல்லார் என்பது இக்குறளின் திரட்டுப் பொருளாகும்.

பிறரால் பழித்துச் சொல்லப்படாத புகழ்வறுமை எல்லாருக்குமா வரும்? பழி வறுமையானால் பலப்

பலர்க்கும் வரும். புகழ் வறுமை எவ்வளவோ மேலாந் தன்மை உடையவர்க்கு அல்லவோ வரும்! அதனால், மேலாந்தன்மையர் எய்தும் புகழ் வறுமையை நத்தம் போல் கேடு" என்றார் திருவள்ளுவர். (235)

நத்தம் என்பது நத்தை அல்லது சங்கு. அச் சங்கினை எவ்வளவுக்கு எவ்வளவு சுடுகின்றனரோ அவ்வளவுக்கு அவ்வளவு வெண்ணிறமாக விளங்கும். மற்றவையெல்லாம் சுட்ட அளவால் கரிந்து கரியாக வும் கறுப்பாகவும் போய்விட நத்தம் எனப்படும் சங்கு சுடச்சுட வெளுப்பாவதுடன் வெள்ளைவண்ணப் பொருளாகவும் சிறந்து விளங்கும்.

இதனால்,

***"அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்***
***நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்***
***கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு***
***சுட்டாலும் வெண்மை தரும்"***

என மூதுரை எழுந்தது (5). இப்பாடற் கருத்து வள்ளு வத்தின் "நத்தம் போல் கேடு" என்னும் உவமைத் தொடர்க்கு வாய்த்த உண்மை விளக்கமாகும். வள்ளுவமோ,

***"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்***
***சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"***

எனச் சுடு பொன் உவமையையும் கூறும். (267)

நட்பியல் இன்னதென விளக்கும் வள்ளுவம், "நண்பனுக்குக் கேடானவற்றை விலக்குதல், அவனை நல்வழியில் செலுத்துதல், தவிர்க்க முடியாமல் கேடு வருமாயின் அவனொடும் துன்புறுதல்" என்றும்,

"மானக்காப்பாம் உடையைப் பறிகொடுத்தவனின் கை தானே போய், உடனே மானக் காப்பாக உதவுவது போல் நண்பனுக்குத் துன்பம் வருங்கால் உடனேபோய் அத்துன்பத்தை நீக்குதல் வேண்டும்" என்றும், "நட்பிற்கு அமைந்த மேலான இருப்பிடம் யாது என்றால் மனச்சுழற்சி இல்லாமல் தன்னால் முடிந்த இடங்களிலெல்லாம் உறுதிப் பாடாக இருந்து உதவுதல்" என்றும் (778-779) கூறும்.

நட்பியலைக் கூறிய வள்ளுவம் நட்புக்கு உரியவரை ஆய்ந்து கொள்ள வேண்டிய இன்றியமையாமையையும் கூறியது. அது 'நட்பாராய்தல்' என்பது.

"பலகாலமும் பலவகையாகவும் ஆராய்ந்து கொள்ளாதவனின் நட்பு, இறுதியில் தானே நொந்து நொந்து சாவுமாறான துன்பத்தைத் தரும்" என எச்சரிக்கிறது ஒரு பாட்டு (792)

**"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்"**

என்பது அது.

ஆக்கப் பொழுதுகளில் எல்லாம் உடனிருந்து மகிழ்ந்தவன் அழிவுப் போதில் ஓடிப்போதலும் உலகியலில் உண்டுதானே!

அதனைத் தானே மூதுரை, (18)

**"அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலுமே**
**ஒட்டி உறுவார் உறவு"**

என்னும்,

நண்பனுக்குத் துன்பம் உற்றபோது உடனிற் பானை, காயும் பொன்னோடு உடன் காயும் சூட்டுக் கோலுக்கு ஒப்பிட்டுச் சுட்டுவதும் உலகியல்.

இத்தகைய ஊன்றிய நட்பிலாரை உரைக்கும் திருவள்ளுவர்

***"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை***
***உள்ளினும் உள்ளம் சுடும்"*** (799)

என்பார்.

"கேடு வரும் பொழுதில் நண்பரைக் கைவிட்டுச் செல்பவர் நட்பு, போர்க்களத்தில் தனித்து நின்று பகைவரால் அழிவுறும் போதில் நினைத்தாலும் அவ்வழிவினும் கைவிட்டுப் போன நண்பன் செய்த அழிவே உள்ளத்தைச் சுட்டெரிக்கும் என்பது இப்பாடற் பொருள்.

கேடு என்னும் வறுமையின் கொடுமையைக் கூறிய வள்ளுவர், உலகியலில் கேடும் பெருக்கமும் இல்லாதவை அல்ல என்றும், அவை ஒப்புரவால் மாற்றத்தக்கனவே என்றும், நல்லோன் வறுமை யுறுவது இல்லை என்றும், அவன் வறுமையெனக் கருதுவது பிறர்க்கு உதவமுடியவில்லையே என வருந்து வதேயாம் என்றும், நல்லோன் வறுமையைச் சான் றோர் பழியார் என்றும், நல்லோன் உற்ற வறுமை புகழுக்கு இருப்பிடமானது என்றும், ஆக்கக் காலத்தில் உடனிருந்து அழிவுக் காலத்தில் ஓடுவார் கொலையாள ரினும் கொடுமையானவர் என்றும் கூறிய வள்ளுவர், "வாட்டும் வன்துயர் நிலையிலும் வாய்ப்பு ஒன்று உண்டு" என்று தெளிவிக்கிறார். அழிவு பாட்டையும் ஆக்கப்பாடமாக எடுத்துக் கொண்டு நலம்பெற நயமான வழிகாட்டுகிறார். அது,

*"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை*
*நீட்டி அளப்பதோர் கோல்"* (796)

என்பது.

"வறுமையும் இடரும் வருவதிலும் ஒரு நன்மை உண்டு. அது, நெருக்கடி நிலையிலும் விலகாமல் ஒட்டி யிருப்பவர் இவர் என்பதையும், அந்நிலை வருமெனத் தெரிந்த அளவில் எட்டி ஓடுவார் இவர் என்பதையும் தவறா வகையில் அளந்து காட்டும் அளவுகோலாகும்" என்றார்.

கேட்டிலும் ஒரு நன்மையுண்டு என்று நலங் கண்டு கூறும் இத்தேர்ச்சி எத்தகைய மேம்பட்ட தேர்ச்சி! உலகியல் அறிந்து ஊக்கும் வகையால் ஊக்கி உயர்த்த வல்ல இத்திறம் எளிதில் வாய்ப்பதா? இவ் வாய்ந்த திறத்தால் அல்லவோ வறுமையை நல்குரவு என்றும், நிரப்பு என்றும் தேர்ந்தெடுத்த கலைச் சொற்களால் வழங்கினார் வள்ளுவர்.

நல்குரவு என்பது நல்கப்பட்ட (கொடுக்கப்பட்ட) உரவு (வலிமை) என்பதாம்.

நிரப்பு என்பது நிரம்பிய நன்மையது என்பதாம்.

இவ்விரண்டும் மங்கல வழக்குகள் அல்ல! இன்மையால் இந்த உலகம் கொண்டிருக்கின்ற நலங் களை எண்ணிப்பார்த்தால் உண்மை விளங்கும்.

வறுமைக்கும் வாட்டுதலுக்கும் ஆட்படாத எவ ரால் இந்த உலகம் வளம் பெற்றது? வாழ்வு பெற்றது?

உலகம் தழுவிய உயர்வியலைப் பாருங்கள்! உண்மை தானே வெளிப்படும்!

# 3. பொய் மெய்யாகுமா?

*“பொய்மையும் வாய்மை இடத்த”*

திருக்குறளுக்குப் ‘பொய்யாமொழி’ என்பதொரு பெயர். அதன் கருத்துகள் என்றும் பொய்த்தல் இல்லாமல் பயன்படுவன ஆதலின் அப்பெயரால் வழங்கப் பெற்றது. பொய்யா மொழியாம் திருக்குறளை வழங்கிய திருவள்ளுவர் அச்சிறப்பால் ‘பொய்யா மொழியார்’ என்று வழங்கப்பெற்றார்.

திருவள்ளுவர் குறள் ஒன்றனைப் பொன்னே போல் போற்றிக் கொள்ளும் புலவர் சாத்தனார், “பொய்யில் புலவன்” எனத் திருவள்ளுவரையும், அவர் இயற்றிய திருக்குறளைப் ‘பொருளுரை’ எனவும் வழங்குகின்றார்.

திருவள்ளுவரின் வாய்மைப் பொருளில் தோய்ந்த ஒருவர் திருக்குறளை ‘வாய்மை’ என்றே வழங்கினார்.

இவற்றுக் கெல்லாம் தக்காரே வள்ளுவர் என்பதை மெய்ப்பிப்பது போல வாய்மையின் சிறப்பை,

> ***“யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்***
> ***வாய்மையின் நல்ல பிற”*** (300)

என்கிறார். தம் ஆய்வுப் பரப்பை யெல்லாம் சுட்டிக் காட்டுவார் போல “யாம் கண்டவற்றுள்” என்றும், (அதிலும் “மெய்யாக் கண்டவற்றுள்” என்றும்,) வாய்மையைப் போல (நலந்தருவது எந்த ஒன்றும்

இல்லை என்பார் போல) எனைத்தொன்றும்' என்றும் சொல்கின்ற திட்பமும் நுட்பமும் எண்ணத்தக்கவை யாம்.

ஒருவன் நீராடுமுன் கொண்டிருக்கும் உடல் நிலை என்ன? அவனுக்கே தோன்றும் அளவிலா அமை கின்றது. நீராடாமை! அவனை நெருங்கியவர்க்கெல் லாம் மூக்கிலே பட்டுவிடுகிறதே, வியர்வை நாற்றம்! அகத்திலேயும் உண்டாக்கிவிடுகிறதே, அருவறுப்பை; நீராடியமையால் உண்டாகும் கிளர்ச்சி - மன எழுச்சி - எத்தகையது? அவனுக்கே பளிச்சிட்டுத் தோன்றும் அவன் தோற்றம், பிறருள்ளத்தும் விருப்பத்தை ஊட்டுகின்றதல்லவோ?

புற உடல் அழுக்கை - வியர்வை நாற்றத்தைப் போக்கிய அளவிலோ நின்றுவிடுகிறது நீரின் செயல்? புறத்தில் உண்டாகிய தூய்மை, உள்ளேயும் புகுந்து கிளர்ச்சியை உண்டாக்குதலை எவரே அறியார்? இவற்றால் அல்லவோ,

> **"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
> **வாய்மையால் காணப் படும்."** (298)

என்றார் வள்ளுவர்.

"வெளிப்படத் தெரியும் தூய்மை, நீரால் அமை கிறது என்றால், வெளிப்படத் தெரியா, அகத்தூய்மை, வாய்மையாலேயே விளங்கித் தோன்றும்" என்கிறார். "உள்ளத் தூய்மையை மறைந்து கிடப்பது - கண் ணுக்குத் தோன்றாதது என்று எண்ணாதே; அது நீ சொல்லும் வாய்மைச் சொல்லால் வெளிப்படக் கண் காணும் காட்சிப் பொருளாக வெளிப்பட்டு விடும்" என்பாராய்க் "காணப்படும்" என்றார்.

ஒளிவர இருள் அகலும். காரிருள் கப்பிக் கொண்டிருக்கும் பொழுது, “வைகுபொழுது”; “வைகுறு பொழுது”; அப்பொழுதில், கையில் அள்ளிக் கொள்ளலாம் போல் செறிந்து கிடக்கும் மையிருட்டை அகற்றக் கதிர் கால் கொள்கிறது. கதிர் கால் கொள்ளத் தொடங் கும் பொழுதில் தலை தெறிக்க ஓட்டம் பிடிக் கிறது கப்பிக் கிடந்த இருள். அதனால் அப்பொழுது “வைகறை” (வைகு + அறை) எனப்பட்டது.

வைகுதல் = தங்குதல், அறை = அறுத்தல், அகற்று தல். திரிவிளக்கும் எண்ணெய் விளக்கும் மின்விளக்கும், வீட்டுவிளக்கும் தெருவிளக்கும் ஊர்விளக்கும் நகர் விளக்கும் என்றால், கதிரோனோ உலக விளக்காகத் திகழ்கின்றது. அதன் ஒளியைத் திங்கள் முதலியவற் றுக்குத்தந்து, அக்கதிர் ஒளி காண வாயா இரவுப் பொழுதில் ஓரளவு ஒளிதரவும் வழி செய்கின்றது. இப்படி இருளை விளக்கும் விளக்குகளாம் இயற்கை செயற்கைப் பொருள்கள் எவை எனினும் அவையும் இணையாகாத ஒரு விளக்கு உலகில் உண்டு. அவ் விளக்கு எது? எனப் புதிர் போடுவார் போலப் புதிர் போடும் பொய்யாமொழியார், “பொய்யா விளக்கு” என்னும் புகழ்விளக்கை ஒரு பேரொளியுடன் உயர்த்திக் காட்டுகிறார்.

***“எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்***
***பொய்யா விளக்கே விளக்கு.”*** (299)

என்கிறார்.

ஒளி தருவன வெல்லாம் விளக்குகள்தாமே! (இருள் அகற்றுவன வெல்லாம் விளக்குகள்தாமே!) அத்தன்மைகளால் தானே விளக்கு என்று வழங்கப்

பட்டன. அவற்றை விளக்கல்ல எனலாமா எனின், பொது மக்கள் அவற்றை விளக்கு என்று பெயர் கூறுதல் பற்றிய மாறுகருத்தன்று அது. பண்பியலால் நிறைந்தோராகிய சான்றோர் புற இருள் நீக்கும் இப் புறக் கருவி - பொறி - இயற்கை விளக்குகளிலும், அக இருள் நீக்கும் நந்தா விளக்கு - அணையா விளக்கு - ஆகிய மெய்விளக்கு இருக்கிறதே அதனையே விளக்கு என அதன் சீர்மை கருதி வழங்குவர் என்பதாம்.

ஒளிதரும் விளக்குகள் என்பன புகாப்பகுதிகளும் மறைவுப் பகுதிகளும் எட்டாப் பகுதிகளும் உள. ஆனால், இப்பொய்யா விளக்கம் என்பதொன்று இருக் கிறதே; இது புகாத இடம், இதனை மறைக்கும் இடம், எட்டாத இடம் எதுவும் இல்லை. எண்ணும் இடத் தெல்லாம் எண்ணிய அளவால் போய் ஒளி செய்யும் எண்ணவிளக்கு இது! இதுவே இதன் தனிச்சிறப்பு என்பாராய்ப் 'பொய்யா விளக்கே விளக்கு' என்றார்.

பொய்யா விளக்கு எண்ணிய இடத்தெல்லாம் எண்ணியபடி ஒளி செய்யும் என்பதைப் பொய்யா மொழியார் எங்கே சுட்டுகிறார் எனின்,

> ***"பொருள் என்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்***
> ***எண்ணிய தேயத்துச் சென்று"*** (753)

என்னும் இடத்துச் சுட்டுகிறார். பொய்யாமை அல்லது வாய்மைச் சிறப்பை உரைத்தலில் அவர் கொண்ட காதல், 'பொருள்' என்னும் 'பொய்யா விளக்கு' என உருவகக் காட்சியை அருளி, எண்ணிய இடத்துச் சென்று இருளறுக்கும் என்று இணைத்து முடிக்க வைக்கிறது.

கொடையால் புகழாகும் (232) வினைத் திறத்தால் புகழ் உண்டாகும் (236) அறத்தால் புகழ் வரும் (39) இல்லாள் சிறப்பால் புகழ்வரும் (59) பொறுமையால் புகழ் எய்தும் (156) இனநலம் புகழ் சேர்க்கும் (457) மறவாமை புகழாக்கும் (532) மானம் புகழ் பூட்டும் (966) ஆயினும் என்ன, பொய்யாமையால் உண்டாகும் புகழுக்கு இணையாகுமா அவை?

**"பொய்யாமை அன்ன புகழில்லை"**

என்கிறார் (296). அம்மட்டோ, அப்பொய்யாமையில் தவறாமையே எல்லா அறங்களுமாம் என்றும் கூறு கிறார். அதனையும் இதன் தொடராகவே கூறுகின்றார்.

**"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும்"** (296)

என்பது அது. 'எய்யாமை'யாவது, சோர்வு அடை யாமை. பொய்யை மறந்தும் கூடச் சொல்லாமையே எய்யாமையாகும்.

இதனையே மேலும் வலியுறுத்தியும் கூறுவார். அது,

**"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று."** (297)

என்பது. இதில் "பொய்யாமை பொய்யாமை" "செய் யாமை செய்யாமை" என்றவை வாளா (வெறுமனே) அடுக்கிக் கூறப்பட்டவை அல்ல! விரைவு அச்சம் முதலியனவாகச் சொல்லப்படும் அடுக்கு வகைப் பட்டனவும் அல்ல.

"பொய்யாமை என்பதைப் பொய்யா வகையில்" என்னும் பொருளுற அமைந்தது, "பொய்யாமை பொய் யாமை" என்னும் முதல்தொடர்; அது, "பொய்யாமை

பொய்யாமை ஆற்றின் அறம்" என முடிந்து நின்றது. "பிற செய்யாமை செய்யாமை நன்று" என்பது இரண்டாம் தொடராய் இணைந்து நின்றது. "மற்றுச் செய்யக் கூடாதவை என்று சொல்லியவற்றைச் செய்யா திருத்தல் மேலும் நல்லதாம்" என்னும் பொருளது அது. ஆதலால், பொய்யாமை அறத்தின் நலத்தை வற்புறுத்திக் கூறிய வகையது ஈதாம்.

கருதாமலே வாய்வந்த வரத்தில் சொல்லுகின்ற பொய்யும் உண்டு. வேண்டும் என்றே திட்டமிட்டு மனம் அறியச் சொல்லும் பொய்யும் உண்டு. முன்னது விளையாட்டுத்தனம், அறியாத்தனம் என எண்ணி இகழும் அளவில் தள்ளப்படுவனவாம். ஆனால் பின்னதோ பொய் சொல்லப்பட்டவனாலே அன்றி, அதனை அறிந்தவராலும் அன்றி, அதனைக் கூறிய பொய்யனாலுமே பொறுத்துக் கொள்ளக் கூடாத குற்றமாக அமையும்; நாளும் நாளும் வாட்டுவதாக இருக்கும் என நுணுகியுரைக்கிறார் வள்ளுவ ஏந்தல். அது,

> ***"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின்***
> ***தன்நெஞ்சே தன்னைச் சுடும்.*** (293)

என்பது. "சுடுபட்டான் சுடுபடுவன்" என்பதனினும் "சுட்ட வன் நெஞ்சே சுடும்" என்பது எத்தகு கொடுமை யானது? "தன்னைச் சுடும் ஒன்றைத்தானே பற்ற வைத்து, பாதுகாத்து வைத்துப் பாழாகிப் போக வேண்டுமா?" என்னும் 'உள்ளுறை' அறைந்து உணர்த்துகிறார் வள்ளுவர்!

இப்படியெல்லாம் பொய்யாமையின் புகழை, வாய்மையின் வானார்ந்த நிலையை வரிசைப்படுத்தும் வள்ளுவர்,

*"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று.* (323)

என்று வரிசையில் பின்னிட வைக்கிறாரே! என்று எண்ணத்தோன்றும்; 'முரண்தானே இது' என்று சொல்லவும் தோன்றும்! ஒன்றாகச் சொன்னதை அவரே இரண்டாம் இடத்திற்குத் தள்ளினால் இத் தோற்றங்கள் எழுதல் இயற்கைதானே!

வள்ளுவர் வாய்மை நெஞ்சம் "வாய்மையே! வாய்மையே!" என்று பறை சாற்றிய கிளர்ச்சி நெஞ்சம், 'கொல்லாமை'க்கு முதலிடம் தந்து, அதற்குப் பின்னே வைக்க அவரை ஏவியது எது? அவர்தம் அருள் நெஞ்சமே - உயிர்நேய நெஞ்சமே - பிறர் துயர் காண ஒண்ணாப் பெருநெஞ்சமே - பிறிதுயிர் துடிக்கும் துடிப்புக்குத் துடித்துத் துளங்கிய தெய்வ நெஞ்சமே அப்படி அடுத்த இடத்தில் வைக்க ஏவிற்றாம்! ஏன்?

பொய்மையின் விளைவு, பழியாம்! பாவமாம்! மனம் வருந்தும் நிலையாம்! வாடும் நிலையுமாம்! பொய்மை உயிரை வாட்டுமேயன்றி வருத்துமேயன்றிக் கொலையைப் போல உயிரை ஓட்டும் கொடுமையைச் செய்யாதாம்!

பொய்மை கூறிய ஒருவன் பழியனாய் - பாவனாய் - வாழலாம்! அவன் சுடவும் வருந்தவும் வாடவும், கூட லாம். அவற்றால் "வாய்மைக்கு இவனேகாண்" என்று அவன் பின்நாளில் பாராட்டுப் பெறுமாறு வாழவும், அவனைப் பிறர் வாழ்த்தவும் நேரலாம். ஆனால் கொலை செய்துவிட்டான் ஒருவன், அக்கொலையை மாற்றி, அப்போன உயிரை மீட்டு வழங்குவதற்கு ஆகுமோ? அவன் திருந்தி அருளாள வாழ்வுக்கு உறை

விடமாக மாறிப் புத்துயிர் பெற்றுப் புகழாளனாக உலாவரும் நிலைமை ஒருகால் உண்டாயினும், அவனால் கொல்லப்பட்ட உயிர் கொல்லப்பட்டது தானே!

*"வாழும் உயிரை வாங்கிவிடல் - இந்த*
*மண்ணில் எவர்க்கும் எளிதாகும்*
*வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு*
*வேந்தன் நினைக்கினும் ஆகாதையா?"*

என்று சொல்வது அன்றிச் சொல்வதென்ன? ஆதலாலேயே, முழுதுலக முதற்பரிசுக்குரிய மெய்யனையும், உயிர்க்கொலை என்னும் ஒன்றைக் கருதாத அருளாளனுக்கு முன்னே முகங்காட்ட வைத்து, அருளாளனைப் பரிசுக்கு உரியவனாக்கி விட்டாராம் வள்ளுவர்!

முதன்மையைத் தட்டி, இரண்டாம் இடம் தந்தது போகட்டும். 'பொய்யாமை' 'பொய்யாமை' என்ற பொய்யாமொழியார் - பொய்யில் புலவர் - பொய்யும் சொல்லலாம் என்கிறாரே! இது முறையா? என ஒருபக்கம் பாய்ச்சி மறுபக்கம் உருவும் வினாக்களைத் தொடுப்பார் உளர். அவர்தம்,. வழுவாத வாய்மைக் காவல், ஏன்? காதல் - பாராட்டுக்குரியதே! ஆனால் அவர் வள்ளுவ வாய்மை இலக்கணத்தை வழுவின்றி அறிந்திருந்தால் இவ்வாறு கூற வாய்திறவார். மேலும் அவர் சுட்டும் குறளின் சொல்லாட்சியைத் தீரத்தெளிய அறியினும் இவ்வளவு எளிமையாய்க் குறை கூறத் துணியார். அவர் வினாத் தொடுக்க அமைந்த குறள்,

*"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்."*

என்பது (292).

இதில் 'பொய்மையும் வாய்மை' என்றார் அல்லர். வாய்மை வேறு; வாய்மை இடம் வேறு. அலுவலர் வேறு; அலுவலர் இடம் வேறு என்பது வெளிப்படு செய்திதானே! அமர்ந்திருக்கும் ஆளும், அவன் அமர்ந்திருக்கும் இடமும் ஒன்றாகி விடுமா? ஒப்பாகி விடுமா? ஒன்றாக்கியோ ஒப்பாக்கியோ விடக் கூடாதே!

ஓர் அலுவலகத் தலைமையாளர்; அவர் ஒருநாள் அன்று; ஒரு வேளையும் அன்று; ஒருமணிப் பொழு தளவு அலுவலகப் பணியை விட்டுச் செல்லவேண்டி யுள்ளது. அந்நிலையில் அவர் அப்பொறுப்பை அவர் வரும் வரை மற்றொருவர் பார்த்துக் கொள்ளுமாறு திட்டப்படுத்தி வைத்துச் செல்கிறார். பொறுப்பில் இருப்பவர் அலுவலர் ஆகார். ஆனால் அலுவலர் பணியைச் செய்பவர் ஆவர். பொறுப்பில் இருப்பவர் அலுவலர் பணியைச் செய்பவர் ஆகிய நிலையிலும் அவர் 'பொறுப்பு' என ஒப்பமிடுவரே அன்றி, 'அலு வலர்' என ஒப்பமும் இடார். அப்படி ஒப்பமிட்டால் அவர் அலுவல் நடைமுறைக்கு மாறு செய்தவரே ஆவார். 'பொறுப்பு' என்ற அளவில் ஒப்பமிட்டால் அவர் செயல், அலுவலர் செய்ததாக ஆகாது. அவர் செயல் அவர் செயலாகவே கொள்ள முறைமையும் உண்டு. இவ்வாறு எண்ணிப் பார்ப்பின் வள்ளுவர் மாறு கூறினார் என்னும் கருத்து எழாது. இதற்காகவே அவர் மிக விழிப்பாக வாய்மையின் இலக்கணம் இன்ன தெனத் தலைப்பட வைத்தார். அது,

> **"வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதொன்றும்**
> **தீமை இலாத சொலல்"** (292)

என்பது.

'உள்ளது உள்ளபடி' என்பதே வாய்மை என்று சொல்லாமல் யாதொன்றும் தீமை இல்லாததைச் சொல்லலே வாய்மை என அற-அருள் நெஞ்சச் சுரப்பாக வாய்மை இலக்கணத்தை வரம்பு கட்டி உரைக்கிறார். அவ்வரம்பை உடைக்காமல் அல்லவோ வாய்மையைக் காணுதல் வேண்டும்.

உள்ளது உள்ளபடி கூறலால் தீமை, கூறுபவனுக்கு இல்லை கூறப்படுபவனுக்கு உண்டாகுமானால், அது வாய்மை ஆகாது. ஏனெனில், "யாதொன்றும் தீமை இலாத சொலலே வாய்மை" என இலக்கணம் கூறுகிறார்.

புரைதீர்ந்த (குற்றமற்ற) நன்மை பயக்கும் ஓரொரு பொய்யும் உண்டே! **அத்தகு பொய்**, பொய்யால் உண்டாகும் **தீமையை** உண்டாக்காமல் வாய்மையால் உண்டாகும் **நன்மையை** அல்லவோ செய்கின்றது! இத்தகு நலஞ்செய்யும் பொய்யைப் பொய் என்பதும் ஆகாதே; நலம் செய்யும் நயத்தால் வாய்மை என்பதும் ஆகாதே; என்பாராய் "வாய்மை இடத்த" என்றார். நலம் செய்யும் பொய்யால் எவ்வகையாலும் எவர்க்கும் தீமை உண்டாகி விடுதல் ஆகவே ஆகாது என்பாராய் மிக விழிப்புடன் "புரைதீர்ந்த நன்மை" என்கிறார்.

சிறிது முன்னே ஒருவன் ஓடினான்; ஓடியவனை அப்பகுதியில் வேலை செய்து கொண்டு இருந்தான் ஒருவன் கண்ணாரக் கண்டான். அவன் ஓடிச்சென்று சிறிது பொழுதுதான் ஆயிற்று. பின்னே ஒருவன் வாளும் கையுமாக ஓடிவந்து "இவ்வழி ஒருவன் போனானா?" என்று வினவுகின்றான். அவன் கொண்டுள்ள கருவியும் விரைவும் உணர்வும் அவனைக் கொல்லவே செல்கின்

றான் என்பதைக் காட்டுகின்றன. ஆகலின் 'நான் காண வில்லையே' என்கிறான். அல்லது, அவன் செல்லும் திசையை மாற்றி இவ்வழியாகப் போகிறான் என்கிறான். இவை சொல்லளவால் பொய்யாவனவே. எனினும் விளைவால் பொய் தரும் தீமையைத் தந்தில. வாய்மை தரும் நன்மையையே செய்தன. அதனால் பொய்யும் ஆகாமல், வாய்மையும் ஆகாமல் வாய்மை இடத்தது ஆகின்றது. இடத்தது என்றதால் வாய்மை இருக்கும் இடத்தில் இருக்கிறது என்று ஆகுமே அன்றி அதுவே வாய்மை ஆகிவிடும் என்று கொள்ளுதல் ஆகாதே! தவறாக நாம் எண்ணிக் கொண்டு தவக் குறளைக் குறைகூறுதல் தகாதே!

# 4. தீ நட்பு

நட்பு, நட்பு ஆராய்தல், பழைமை, தீ நட்பு, கூடாநட்பு எனத் தொடர்ந்து ஐந்து அதிகாரங்களை வைத்திருக்கிறார் திருவள்ளுவர். இன்னும் சிற்றினம் சேராமை என எதிர்மறையிலும் பெரியாரைத் துணைக் கோடல் என உடன்பாட்டிலும் நட்புக்குத் தொடர் புடைய இரண்டு அதிகாரங்களையும் வைத்துள்ளார்.

கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் எனத் தனித்தனி அதிகாரங்களை வகுத்து வரும் திருவள்ளுவர் நட்பு என்னும் ஒரு பொருளுக்கு ஏழு அதிகாரங்களை வைத்துள்ள ஒன்று, நட்பின் சிறப்பையும் அந்நட்பின் ஆக்கம் கேடுகளை யும் நட்பில் விழிப்பாக இருக்க வேண்டிய கட்டாயத் தையும் கருதிச் சொல்லப்பட்டதாக உணர்தல் நலமாம்.

இறைமாட்சி செங்கோன்மை கொடுங்கோன்மை என்றும் கல்வி கல்லாமை கேள்வி அறிவுடைமை என்றும் வினைத் தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை, தீவினை அச்சம் என்றும் பலபட விரிக்கும் திருவள்ளுவர் மற்றை எவற்றினும் விரித்துச் சொல்வது நட்பு ஒன்றையேயாம். இதனால் ஒருவர் வாழ்வும் தாழ்வும், ஆக்கமும் கேடும் நட்பால் விளைவதே என்பதைத் தெளிவிக்கவே திருவள்ளுவர் இம்முறையை மேற்கொண்டார் என்பது விளக்கமாகும்.

நட்பு, நட்பு ஆராய்தல் என்பவை வெளிப்படையாக அறியக் கூடிய அதிகாரப் பெயர்கள். பழைமை என்பது பரம்பரை பரம்பரையாகத் தொடரும் நட்பாகும். தீ நட்பு கூடாநட்பு என்பவை விலக்கத் தக்க நட்பாகும். ஒருவர் கல்விமேல் எப்படி விருப்புக் கொள்ளவேண்டும் என்பதை நன்னூலார், "பருகுவன் அன்ன ஆர்வத்தனாகி" என்பார். நீர்வேட்கையுடையார் நீரைத்தேடிப்பருகுவது போன்ற ஆர்வமுடையவராகக் கற்க வேண்டும் என்கிறார். திருவள்ளுவர் பெருந்தீனியர் தேடித் தேடி உண்பது போலச் செவியுணவாகிய கேள்வியைப் பெற வேண்டும் என்றும், செவிக்கு உணவாகிய கேள்வி கிடையாதபோதிலேயே வயிற்றுக்குச் சிறிது உணவு கொள்ள வேண்டும் என்றும் கூறுவார். தீ நட்பின் முதற்குறளோ,

> ***"பருகுவார் போலினும்! பண்பிலார் கேண்மை***
> ***பெருகலிற் குன்றல் இனிது"*** (811)

என்கிறது. பருகத்தக்க சுவை நீரும், சுவையுணவும் போன்றவர் என்றாலும், அவர் நட்பியல்பு இல்லாதவராக இருப்பாரேயானால், அவர் நட்பைப் பெருக விடாமல் சுருக்கி ஒழித்து விடுவதே இன்பமாகும். அவர் நட்பைப் பெருக்கினால் வெறிநீர், மயக்கு நீர், நச்சு நீர், ஒவ்வா உண்டி, ஊறுசெய்யும் உண்டி என்பவற்றைப் பருகியும் உண்டும் கேடு தேடிக் கொண்டது போன்றதாம் என எச்சரிக்கிறார்.

நட்பைக் கருதாமல், தங்களுக்கு வாய்க்கும் நலத்தையே கருதி, வாய்ப்பாக இருக்கும் நாளில் வந்து கூடிக் குலாவியும் வாய்ப்புத் தீர்வதற்கு முன்னரே விட்டு ஓடியும் போகும் தீய போலி நட்பினரும் உண்டு.

அத்தகையர் நட்பை அறவே விட்டு விடுதல் வேண்டத் தக்கதாம். இதனைத் திருக்குறள்,

***"உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை***
***பெறினும் இழப்பினும் என்?"*** (812)

என்கிறது. பெற்றால் கேடும், இழந்தால் நலமும் சேரும் என்பதால் அத்தகையர் தொடர்பை விடுதலே நலமாம் என்கிறது இது.

"நாம் நட்புக் கொண்டால், அவரிடம் இருந்து எவ்வெவற்றைக் கவர்ந்து கொள்ளலாம்" என்று எண்ணியே நட்பினராக வருவார் உளர். இத்தகையர் திருப்பித்தருகிறேன் என்று சொல்லி வாங்கியதைத் திருப்பித் தாராதவரும், பிறர் சோர்ந்த நிலையை அறிந்து திருடிக் கொண்டு போகின்றவரும் போன்றவர் ஆவர். அவர்களோ நம்பிக்கைக் கேடர்; நஞ்சனையர். ஆனால் நட்புப் பெயரால் அக்கேட்டைச் செய்பவரோ, அவரினும் பெருங்கேடர் என்பது இதனால் தெளிவாகும்.

***"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது***
***கொள்வாரும் கள்வரும் நேர்"*** (813)

என்கிறது அக்குறள்.

ஒரு பெருவீரன்; போர்ப்பயிற்சி மிக்கவன்; கருவிகளும் தரமானவை; அவன் துணிவொடு முன்னேறுகிறான். அவன் தன் துணிவுக்குத் தக்க துணையாக இருக்கும் எனக் கருதிய அவன் ஊர்தியாகிய குதிரை, போர்க்களத்தைக் கண்ட அளவில் வெருண்டோடி அவனைக் குப்புறத்தள்ளி விட்டால், வீரன் நிலை என்ன ஆகும்? அதற்கு அக்குதிரையை இல்லாமல் தனித்துச் சென்று போரில் நின்றிருந்தாலும் எவ்

வளவோ நன்மையாக இருந்திருக்கும் அல்லவோ! ஆனால், நம்பிய குதிரை எத்தகு கேட்டையும் இழிவையும் உண்டாக்கி விடுகிறது! அதுபோல், தீயநட்பினர் தொடர்பும் எதிர்பாராத் தீமைகளுக்கு இடமாகிக் கெடுக்கும்! அவர் நட்பு அறவே ஆகாது.

***அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்***
***தமரின் தனிமை தலை.*** (814)

**சீவக வழுதி** வேந்தன், போர்க்களத்தில் நிற்கிறான். தீய அமைச்சன் **குடிலன்** சூழ்ச்சிப்படி சீவகனைச் சூழ்ந்து நின்ற வீரர்கள் தனித்தனி ஒதுங்குகின்றனர். வேந்தன் தன்னந் தனியாகிப் பகைவர் கையில் அகப்படும் சூழ்நிலை உண்டாகிறது. மதிற்காவலில் ஈடுபட்டிருந்த நடராசன் ஓடிவந்து வேந்தனைப் பாது காத்து இடர் தீர்க்கின்றான். தீ நட்பின் கேட்டையும் நன்னட்பின் நலத்தையும் ஒருங்கே காட்டும் நிகழ்ச்சி ஈதாகும். இது மனோன்மணீயம் தரும் செய்தி

ஒருவர் நட்பினராகக் கூடுகின்றார்; மெய்யான நண்பராக இருப்பார் போல் இருக்கின்றார், உயிரையே தருவார் போலவும் காட்டுகின்றார் ஆனால், ஒரு சிறு நெருக்கடி ஏற்படும் பொழுதில் நில்லாமல் ஓடிப் போகின்றார். இத்தகைய கீழ்மைத் தன்மையர் நட்பை எய்துவதினும் எய்தாமல் இருப்பது எவ்வளவோ நலப்பேறாகும்.

இதனை,

***"செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை***
***எய்தலின் எய்தாமை நன்று."*** (815)

என்கிறது திருக்குறள்.

ஏமம் என்பது பாதுகாப்பு. ஏமம் சாரா எனில், பாதுகாப்பு அமையாத என்பதாகும்.

அறிவில்லான் நட்பு முதற்கண் பெருகித் தோன்றும். வரவரச் சுருக்கம் ஆகும். தேய்பிறை போல் தேயும் எனவும், அடிக்கரும்பில் இருந்து தின்பதுபோல் சுவை குன்றும் எனவும் கூறுவர். ஆனால் திருவள்ளுவர், அறிவில்லாதவன் பெரிதும் நெருங்கி நட்புக் கொள்வதைக் காட்டிலும், அறிவாளர் பகைவராக இருப்பினும் பலப்பல நலங்களே எய்தும் என்கிறார்.

**"பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி உறும்"** (816)

என்பது அது, அறிவாளர் பகைவராக இரார். இருப்பினும் முறைகடந்து தீமை புரியார். தீமை புரிவது தமக்கு இழிவாம் என்னும் மனச்சான்றால் நலமே புரிவார். நலம்புரியா நிலை உண்டாகினும் தூற்றாதும் எதிரிடாதும் ஒதுங்குவார். இவையெல்லாம் திருவள்ளுவர் இன்னா செய்யாமை, சான்றாண்மை, பண்புடைமை, ஒப்புரவு, அருளுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, பொறையுடைமை, அடக்கமுடைமை என்பவற்றில் விரித்து விரித்துக் கூறுவனவே யாம்.

நட்பு என்பது பொழுது போக்குப் பொருள் அன்று. கேலி கிண்டல் பொருளும் அன்று; விளையாட்டு வேடிக்கைப் பொருளும் அன்று. அது உயிர்க் காப்பான உயர்பொருள். உயிரை ஈந்தும் நட்புக்கு உதவும் நாகரிகம் உடையது. அத்தகைய நட்பினை நகைப்புக்காக - சிரிப்புக்காகப் - பயன்படுத்தும் இழிவை நல்லோர் கொள்ளார். அவர்தம் நட்பைப் போற்றார். அத்தகைய இழிந்தோர் நட்பின் தீமை

பெரிதாம். சிரிக்கச் சிரிக்கப் பேசிச் கீரைக் கெடுத்துச் சீரழிப்பாரால் உண்டாகும் கேட்டைப் பகைவரால் கூடச் செய்தல் இயலாது. பகைவர் செய்யும் கேட்டினைத் தவிர்க்கலாம். தப்பலாம். ஆனால் நண்பாகக் காட்டிக் கெடுப்பார் கேடு பெருங்கேடாக வும், தீர்க்க முடியாததாகவுமே அமைந்து விடும். ஆதலால்,

**"நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்**
**பத்தடுத்த கோடி உறும்."** (817)

என்கிறார். பத்தடுத்தகோடி, பத்துக்கோடி. உறும் என்பது தீமை அன்று. நன்மை. பல்கோடி நன்மையாம் என்பது காட்டுவது, "பகைவரால் படுத்தடுத்த கோடியுறும்" என்பதாம்.

நாம் நடக்கும்போது வழுக்கலோ தளர்வோ உண்டாகுமானால் ஊன்று கோல் வழுக்கலையும் தளர்வையும் போக்கி உதவும். ஆனால் அந்த ஊன்று கோலே ஒடிந்தும் இடறியும் தள்ளி விடுமானால் எத்தகைய தீமையாம்.

நாம் நம்பிக்கையோடு அழைத்துச் செல்லும் ஒருவனே கொள்ளையனாகவும் கொலைஞனாகவும் இருந்துவிட்டால் வேறு ஒருவர் கெடுக்க வேண்டுமா?

நாம் ஏறிச் செல்லும் படகே நடுக்கடலில் ஓட்டையுடையதாகி நீரில் கவிழ்ந்தால் நிலை என்னாம்?

இவற்றைப் போன்ற தீய நண்பரும் உண்டு. அவர்கள் தாமும் ஒரு நல்ல செயலை செய்யார்; நல்ல செயல் செய்வாரையும் செய்யவும் விடமாட்டார். ஏறவிட்டு ஏணி வாங்குவது போலவும் அரங்கத்தில் ஏற்றி ஆடையைப் பறிப்பார் போலவும் சிறுமைக்கே இடமாகி இருப்பர்.

இத்தகைய தீயநட்பை,

***"ஒல்லும் கருமம் உடற்று பலர்கேண்மை***
***சொல்லாடார் சோர விடல்"*** (818)

வேண்டும். ஒல்லும் கருமமாவது நம்மால் செம்மை யாகச் செய்து முடிக்கக் கூடிய செயல். உடற்றுபவர் - செயலைச் செய்யவிடாமல் அலைக்கழிப்பவர். சொல் லாடார் சோரவிடல் என்பது சொல்லிக் காட்டாமலே அப்படியே ஒழிந்துபோக விட்டு விட வேண்டும் என்பதாம். இத்தகைய நட்பைச் சொல்லவும் ஆகாது. சொல்லின் நெஞ்சில் இருப்பதாகத் தானே பொருள். அந்நினைவும் ஆகாது என்பாராய்ச் சொல்லாடார் சோரவிடல் என்றார். அத்தகையர் நட்பைக் கொள்ளல் கூடவே கூடாது என்பது கருத்தாம். சொல்லக் கூடாது என்ற திருவள்ளுவர், கனவில் கூட அத்தகையர் நட்பை நினைத்தல் ஆகாது என்கிறார். கனவு என்பது என்ன? ஆழ்மனப் பதிவே கனவாம். என்றோ கண்டதைக் காணவும், கேட்டதைக் கேட்கவும் ஆவது அஃது ஆழ் மனத்தில் பதிந்து கிடப்பதனாலேயேயாம். எரிமலை கக்குவது இல்லையா? தன்னூற்று - ஆர்ட்டீசியன் ஊற்று பொங்கிப் பீரிட்டுப் பீச்சுவது இல்லையா? அணைத் தேக்கத்தில் சிறிய துளைவிழுமானால் குமுறிப் பாய்வது இல்லையா?

இப்படிக் கிளர்வதே கனவாகும். இத்தகு கனவி லும் சொல்வேறு செயல்வேறு பட்ட தீய நட்பினரைக் காணுதல் ஆகாது என்கிறார். அப்படி யானால் அதன் தடமும் படியாவாறு மறந்து விட வேண்டும் என்பதாம்.

***"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு***
***சொல்வேறு பட்டார் தொடர்பு"*** (819)

என்பதுஅது.

சொல்லும் செயலும் ஒன்றாகாரைக் கனவில் காண்பதும் துன்பம் என்கிறார். சில காட்சிகள் கனவில் காணப்படினும் மகிழ்வு தரும்! இன்பம் தரும்! கலகலப் பாகச் சிரிக்கவும் செய்யும். சிலகனவுகள் கனவு முடிந் தாலும் நடுங்கவும் நினையும் போதெல்லாம் அஞ்சவும் செய்யும் அல்லவோ! அத்தகைய கொடுமையே வடி வாம் கனவே இத்தீயநட்பினரைக் காணும் கனவு என் கிறார். அதற்காக ஓர் எச்சரிப்புத் தந்து அதிகாரத்தை நிறைவாக்குகிறார் திருவள்ளுவர்.

அது,

***"எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ***
***மன்றிற் பழிப்பார் தொடர்பு."*** (820)

என்பது.

வீட்டிலே இருக்கும்போது இப்படி நண்பர், உண்டா என்று மெச்சுமாறு இருப்பார். இவர் நட்பைப் பெற்ற பேறே பேறு என மகிழுமாறும் தோன்றுவார். ஆனால் நாட்டு மாந்தர் காட்டு விலங்கானது போல ஊர்கூடிய அரங்கிலே பழித்தும் இழித்தும் பேசுவார். மனையிடத்திலே நட்பாம்! மன்றத்திடத்திலே பகைப் பழிப்பாம்! இத்தகையரை எக்காரணம் கொண்டும் நெருங்குதல் கூடவே கூடாது என்கிறார்.

நட்பில் பிழை பொறுத்தல் வேண்டும் என்பர். அழிவந்த செய்தாலும் வழிவந்த நட்பை விலக்கக் கூடாது என்றும் கூறுவர். ஆனால் அந்நட்போ நண்பனை எந்நிலையிலும் எவரிடத்தும் விட்டுக்

கொடுக்காத - காட்டிக் கொடுக்காத - இழிவுக்கு இட மாக்காத நட்பாகும். அது பழைமை என்று வள்ளுவ ரால் பாராட்டப்படுவதாம்.

அதற்காகவே நட்பாராய்தல் என்றோர் அதிகாரம் வைத்தார் திருவள்ளுவர்.

**"நாடாது நட்டலின் கேடில்லை"**

என்றும்

**"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை"**

என்றும் நட்பாராய்தலில் கூறுகிறார். அந் நட்பாராய் தலைப் போற்றாமல் தீநட்பில் திளைத்தால் கேடே யல்லவோ!

தீ நட்பினும் கேடானது கூடாநட்பு.

தீ நட்பையாவது விட்டு விலகலாம்! விலக்கலாம்!

ஆனால் கூடார் நட்பைக் கூடி விட்டால்,

அக்கூடாரைவிட்டு விலகவும் இயலாது! விலக்க வும் இயலாது. அதனாலேயே தீ நட்பைக் கூறிய திரு வள்ளுவர் அவ்வளவில் நில்லாமல் கூடா நட்பெனத் தனியே ஓர் அதிகாரம் வகுத்து விரித்துரைத்தாராம்.

தீ நன்மை செய்வது வெளிப்படை. சோறாக்கும்; நீர்வெதுப்பும் பக்குவ முறுத்தும்; நோய் தீர்க்கும்; சுவைப்படுத்தும்.

ஆனால் தீயன் நலமாக்குவனோ? தீக்குணம் நலம்புரியுமோ? ஆதலாலேதான்,

**"தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்."** (202)

என்றார் திருவள்ளுவர்.

*தீவினையச்சம் என்றே ஓர் அதிகாரமும் அமைத்தார்.*

***"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்***
***தீவினை என்னும் செருக்கு"*** (201)

*என்றார்.*

***"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை***
***வீயா தடியுறைந் தற்று"*** (206)

*என்றும் கூறினார்.*

*தீயவரின் தீமை என்பது என்ன? அவர்தம் நிழல்! நிழல் நீங்குமா? நீங்கா நிழல்போல் தீமையும் அவரைத் தொடர்ந்தே செல்லும்! தீ எவரை - எதை - எரிக்கும்? நெருங்கிய எல்லாவற்றையும் எவரையும் எரிக்கும். அதுபோலவே நீங்காத் தீமையும், அத்தீமையனையே விடாமல் பற்றி எரிக்கவே செய்யும். அத்தீநாவில் பட்டும் சுட்டும் கெட்டொழியாமல் இருக்கவும், எச்சரிக்கையாகத் தப்பவும் தீ நட்புச் செய்வார்க்கும் செய்யப்படுவார்க்கும் பொது அறவுரையாகவும் அறிவுரையாகவும் இவ்வதிகாரத்தைக் கூறியுய்வு நெறி தந்துள்ளார் திருவள்ளுவர் என்பதை நாம் உணர்ந்தால் எப்பாலும் நலமேயாம்.*

# 5. பயனெதிர் பாராமையும் பயனே

பாராட்டு வகைகளுள் பெரியது ஒன்று உண்டு. "அது பயன் எதிர்பாராமல் பணி செய்தல்." என்பது. பயன் எதிர்பாராமல் பணி செய்வது தான், பாராட்டும் பணியா? அப்படிச் செய்வார் உளரா? பயனை எதிர்பாராப் பணி, பணியன்று. பதர்ப்பணி!

பயன் இல்லாமல் ஒரு விடிகாலை கழிந்தது. அதனைப் பதடி (பதர்) வைகல் என்று பழித்தார் ஒரு புலவர். அவர்க்குப் 'பதடி வைகலார்' எனப் பாராட்டு எடுத்தார், குறுந்தொகையைத் தொகையாக்கிய பூரிக்கோ என்பார்.

விழுப்புண் படாத நாளெல்லாம் நாளொடு எண்ணக் கூடாத நாள் என்பது வள்ளுவம்.

இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாள் என்பது பத்திமையார் பாட்டு.

பயன்பாடு வேண்டும்; பயன் கருதாமை பாராட்டுக்கு உரியது அன்று.

ஒருவன் உலாவுவது உடல் நலம் கருதிய பயன் தானே. ஊண் கொள்வது உயிர் நலம் கருதிய பயன் தானே. ஒருவன் உரையாற்றுவது தற்பயனும் கேட்பார் நற்பயனும் கருதியது தானே!

பயனிலாச் செயல் பதர்ச் செயல்.

பயனிலாச் சொல் பதர்ச்சொல்.

பயனிலா நினைவு பதர் நினைவு.

அரிசி இல்லா நெல், நெல் அன்று. அது பதர் நெல். உள்ளீடாம் பயன் இல்லாதது பதர் பதடி பொக்கு (பொய்க்கு). அதனாலேயே,

> ***"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்***
> ***மக்கட் பதடி எனல்"*** (196)

என்றார் திருவள்ளுவர்.

பயனில்லாத சொல்லைச் சொல்வானை மட்டு மன்றி, அச்சொல்லைப் பாராட்டுபவனையும் பதர் என்பது இக்குறள்.

பயன் செயல் செய்வாரை உலகமே உவந்து பாராட்டும் என்பது வள்ளுவம். அது,

> ***"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்***
> ***பண்புபா ராட்டும் உலகு"*** (994)

என்பது.

பயன் கருதியே சொல்ல வேண்டும்; பெரும் பயன் கருதியே சொல்ல வேண்டும்; பயன் கருதாமல் எதனையும் சொல்லுதல் ஆகாது என்பதனாலேயே "பயனில சொல்லாமை" என்றோர் அதிகாரத்தை (20) வகுத்தார் வள்ளுவர்.

பொறாமை, பிறர்பொருள் விரும்பல், புறங்கூறல் தீவினை செய்தல் என்பவற்றுடன் பயனில கூறலையும் விலக்கத்தக்க வரிசையிலேயே வைத்தார். (அதி 17-21)

> ***"சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க***
> ***சொல்லில் பயனிலாச் சொல்"*** (200)

> ***"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்***
> ***பெரும்பயன் இல்லாத சொல்"*** (198)

என்று கூறியவற்றைக் கருதுக.

விளையாட்டிலும் விளைவு வேண்டும் என்று சொற்கண்டது இந்த மண். மரத்திலும் 'பயன்மரம்' எனப் பகுத்துக் கண்டது இந்த மண். அறமே இல் வாழ்வுப் பயன் எனத் தெளிந்தது இந்த மண்.

விளைய வேண்டா என எண்ணிக் கொண்டு எந்த உழவனும் விதை விதைப்பானா? பால் கறக்க வேண்டா என்றா பால் மாடு வாங்குவான்? ஊதியமே வேண்டா என்று எண்ணிக்கொண்டு எந்த வணிகனாவது வாணிகம் செய்வானா? பொழுதில்லை என்று தவிக்கும் வாழ்வில் பொழுது போக்கைக் கருதுவானா ஒருவன்.

ஒவ்வோர் இயக்கமும் பயன் கருதியே ஆம்.

பயன் கருதா இயக்கம் பாழ் இயக்கம்.

எறும்பு முட்டை தூக்கிச்செல்கிறதே.

தேனீ பூந்தேடிச் பறக்கின்றதே.

பூனை எலி வேட்டையில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறது!

புலியைக் கண்டு புள்ளிமான் என்ன ஓட்டம் எடுக்கிறது.

இவ்வுயிரிகள் இயக்கமும் பயன் கருதியவை தானே!

ஆனால் இவற்றின் இயக்கம் பிறர் நலப்பயன் - அல்லது பிறிது நலப்பயன் கருதியதா?

தற்பயன் தற்சார்புப் பயன் கருதியதே.

ஆறாம் அறிவாம் மன அறிவு அவற்றுக்கு இல்லை. 'அருள்' என்னும் 'பொருள்' ஒன்றை அவை அறியா? ஆகலின் பயன் என்பது அவற்றின் தனி

வாழ்வு, சார்பு வாழ்வு அளவிலே கட்டுண்டு நின்று விடுகின்றது.

ஐயுணர்வுக்கு மேம்பட்டதாம் மெய்யுணர்வு பெற்ற மக்கட் பிறவியரும் ஓரறிவு முதல் ஐயறிவுப் பிறப்பிகள் போலத் தற்பயன் தற்சார்புப் பயன் கருதியாக இருந்தால், அம்மக்கட் பிறவியும் இழி பிறவியாகிவிடும் தானே!

வானில் பறக்கும் வாழ்வாளி, மண்ணில் நெளியும் புழுவாக இருப்பின் அப்பிறப்பும் புழுப்பிறப்புத் தானே!

பயன் பார்த்தல் கட்டாயத் தேவை. ஆனால், அப்பயன் தன் நலத்தளவில் தன் சார்பு நலத்தளவில் நில்லாமல் உலகாக - உயிர்களாக - விரிதல் வேண்டும்.

குடும்ப வாழ்வுப் பயன் 'அறம்' என்பார் வள்ளுவர். விருந்தோம்புதலை வேள்விப்பயன் என்பார்.

வாளா எரியும் நெருப்பில் பயன் பொருளைக் கொட்டிப் பாழாக்காமல், ஆறா எரியாய் எரியும் பசி எரியை ஆற்றுவதற்கு ஊண் வழங்குதலே, 'விருந் தென்னும் வேள்விப் பயன்' என்பார். வள்ளலார் இக்கொள்கையை இயக்கமாக்கி நிலை நாட்டினார்.

பயனைப், படுபயன் (172, 676), ஆபயன் (560), மாண்பயன்(901), மாண்டற்கு அரிதாம் பயன் (177), என்பார் வள்ளுவர்.

பயன் ஆய்தலைப் பயன் தெரிதல் (104), பயன் தூக்கல் (103, 912) என்பார். நற்பயனுக்கு மாறாகிய தீப்பயன் தருவனவும் உண்டு என்பதைத் தீச்சொற்பயன் (128), பல்லார் முனியப் பயனில சொல்லல் (191) என்பார். சொல்லப்படும் சான்றோரையும், கொல்லப் பயன்படும் கீழையும் குறிப்பார்.

எல்லா நலனும் அமையினும் வேந்தமைவு இல்லாத நாடு பயன் படாது என்பார். (740).

ஐயுணர்வு எய்தினும் பயனில்லை மெய்யுணர்வு இல்லாதவர்க்கு என்பார் (354). சொல்லாடாமல் இருக்கும் இன்பப் பயனையும் குறிப்பர் (1100). அவையில் சொல்லாடாச் சிறப்பையும் சுட்டுவார் (403). கல்லார், விளை நிலம் இல்லாக் களர் நிலம் ஒப்பர் என்று பயனின்மைப் பிறவிக்குப் பயனின்மை நிலத்தை ஒப்பாகக் காட்டுவார். (406)

“கற்றதனால் ஆகிய பயன் என்ன?” என வினாவி, ‘வாலறிவன் நற்றாள் தொழ’லைக் கவின் விடையாகக் கூறுவார். ‘தாள் தொழல்’ என்பது அடிபற்றல், வழியில் நடத்தல். தூய அறிவன் வழியில் நடத்தலே கல்விப்பயன் என்பார் (2).

அறிவன் எவன்? எனின்,

“மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்” என்பார் தொல்காப்பியர். அறிவர் என்பார் சித்தர் எனப் பின்னாளில் பெயர் பெற்றனர்.

மெய்ச்சித்தராவார் தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகைப் பிறவியர். உள்ளொளி மிக்காராய் வழிகாட்டும் திறவோராய் வாழ்ந்த அவ் வறிவர் வழியில் பிறர்க்கென வாழ்தலே வாழ்வுப்பயன் எனக் கண்டு கொள்க. இவற்றால் பயன் எதிர்பாராமை என்பது, தனக்கெனப் பயனோ, பிறர்க்கெனப் பயனோ எதிர்பாராமை அல்ல! எவர்க்கும், எவ்வுயிர்க்கும் நற் பயன் உண்டாதலும், எவர்க்கும் எவ்வுயிர்க்கும் தீப் பயன் உண்டாகாமையும் ஆகியவற்றைப் போற்றி

வாழ்தலே பயன்பட வாழும் வாழ்வு எனக் கண்டு கொள்ளலாம்.

தற்பயன் கருதா வாழ்வு, பிறர் பயன் கருதா வாழ்வுமாம். தன்னைக் காத்துக் கொள்ளான் பிறரைக் காத்துக் கொள்ள வல்லான் ஆவனோ?

அதனால்தான் 'தான்' என்றும், தற்காத்து என்றும் தன்னைத் தான் காதலன் ஆதல் என்றும் (43, 56, 209) கூறினார். தன்னைத் தான் காக்கின் என்றும் (305), தாம் இன்புறுவது என்றும் (399) குறித்தார்.

தன்னைப் பேணிக் கொண்டு உலகையும் உலகத்து உயிர்களையும் பேணும் பெருந்தகை வாழ்வே வாழ்வு என்பது வள்ளுவத் திரட்டு. ஆன்ம நேயப் பயனே அரும்பயன் என்பது உலக அருளாளர்களின் ஒட்டு மொத்த முடிபு.

# 6. பற்றறுத்தலும் பற்றே

'பல்' வழியாகத் தோன்றிய ஒரு சொல், பற்று. பூனையும், நாயும் தத்தம் குட்டிகளை எப்படித் தூக்கிச் செல்கின்றன! நாம் காண்பதுதானே அது. பல்லால் கௌவிக்கொண்டு செல்வதைப் பார்த்த, கூரிய பார்வையன் அதனைப் படமாக்கிப் 'பற்று' என்றான். பல் + து =பற்று.

பற்று, வரவு-கணக்கில் உண்டு; பற்றுமுறி, பற்றுச்சீட்டு கணக்கு வழியவை. பற்றிப் பிடித்தல் தீக்குச்சியிலும், தீ எரியிலும் பற்றி (பத்தி)யிலும் உண்டு.

பற்றிப்பிடித்தல் பற்றுக்கோடு. பற்றிப் பிடிக்கும் கருவி பற்றுக்குறடு. ஈரிரும்புகளை இணைக்கும் பற்றிரும்பு, பற்றாசு. பற்றி நிற்கும் உறவு பற்றாயம்.

எலிப்பொறி, பற்றுப்பொறி, பற்றாயமுமாம். பற்றற்ற குருவன் துறவன்-பற்றற்றான். பற்றிக் கொள் ளும் தகைமை பற்றுமை; பற்றாட்டு. கலத்தில் பற்றும் அழுக்கு கரி சோறு என்பவை பற்று. அவற்றைத் தேய்த்தல் பற்றுத் தேய்த்தல். பற்றிக் கொள்ளார் பற்றலர் (பகைவர்) பற்றார்.

ஒரு 'பல்', பற்றிக் கொண்டு வரும் பற்று வழிச்சொற்கள். இவையும் இவை போல்வனமுமாம்.

"பற்றறுத்தல்' என்பது பற்றினைப் பற்றாமல் அகற்றுதல் ஆகும்.

முற்றாகப் பற்றறுத்தல் உண்டா?

புத்தர் வரலாறே சான்று; பற்று அறவே கூடாது என்பது அவர் பற்று.

பற்றை விடுதற்கும் பற்றா வேண்டும்?

ஆம் கட்டாயம் வேண்டும்.

இதனால்தான், 'பற்றுக' என்ற வள்ளுவர், பற்றற்றான் பற்றினை' என்றார். ஏன்? என வினவுவார் தெளிவதற்கு, "அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்றார். பற்றை விடவும் பற்று வேண்டும் என்பது வியப்பான இயற்கை நெறி.

பற்று அறுதற்குப் பற்றற்றாரைப் பற்றிக் கொள்ள வேண்டும் எனின், அதுவும் பற்றுத்தானே! அதில் பற்றறுதல் எங்கே இருக்கிறது?

***"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்***
***பற்றி விடாஅ தவர்க்கு"*** (347)

என்னும் குறளால்,

பற்றற்றாரைத் துயரங்கள் பற்றுவதில்லை என்று கண்ட பின்னரும் பற்றற்றாரைப் பற்ற வேண்டுமா?

பற்றற்ற அளவிலேயே அறியாமை அகன்று விடும்; நிலை பேறானது இது. நிலைபேறு அற்றது இது என்பது புலப்படும் என்பதை,

***"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று***
***நிலையாமை காணப் படும்."*** (349)

என்பாரே திருவள்ளுவர்.

பிறப்பு என்பதன் பொருள் 'பிறப்பென்னும் பேதைமை என்பதால் அவர் தெளிவிப்பாரே.

இத்தகைய மேனிலையாம் துறவர்க்கும் மற்றொரு துறவரைப் பற்றிக் கொள்ளல் வேண்டுவதுதானே?

அறவே பற்று அற்றவர் மக்கட் பிறவியருள் தலைப்பட்டவர்; மயக்க வலைக்குள் சிக்கிக் கொள் ளாத விடுதலை (வீடுபேற்று) மாண்பர். அவர்க்கும் பற்றற்றார் பற்று வேண்டுமா? ஆள்வோர் இருப்பார்; அவர்க்கும் அறிவர் துணை வேண்டும். அவர் எவற் றுக்கும் ஆமாம் ஆமாம் போடும் தந்நலத்தர் அல்லர்;

அவர், "இடிக்கும் துணையர்' ஆவர். இடிக்கும் துணையர் இல்லா வேந்து, கெடுப்பார் இன்றியும் கெட்டுப்போகும் என்பதும் (448) இடிக்கும் துணையை யுடைய வேந்தைக் கெடுக்கும் தன்மையர் எவரும் இலர் என்பதும் (447) நேர்முறை, எதிர்முறை வள்ளுவங்கள். இடிக்கும் துணையராம் அவர், வந்த துயர் நீங்கவும் வர இருக்கும் துயரை முன்னரே விலக்கவும் வல்லார் என்பார் (442) இறையாண்மை காக்கவல்ல நிறை யாண்மை ஈதெனின், தனியியல் வாழ்வை நனியியல் வாழ்வாக்கும் நட்பிலும் இந்நெறி போற்றப்பட வேண்டுதலை இயம்புவார் வள்ளுவர்.

> *"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
> *மேற்சென் றிடித்தல் பொருட்டு"* (754)

என்னும் நட்புக் குறளைக் காண்க.

வாழ்வு அளவியல் உடையது. அளவு அறியா தவை செருக்கு, சினம், அவா அன்னவை. அவற்றைக் கொள்ளும் நட்பை நன்னட்பு ஏற்காது. இடித்துக் கேட்கும்; தட்டிக் கேட்கும், தடுத்தும் காக்கும். ஆதலால் 'இடிக்கும் கேளிர்' என நட்பினை இயம்பும் அகப்பொருள் நூல்கள்.

நட்பாராய்தலில் அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய வல்லார் நட்பை (795)த் தேடிக் கொள்ள வலியுறுத்துவார் வள்ளுவர்.

வேந்துக்கும் நட்புக்கும் இடித்துரைப்பார் வேண்டியிருத்தல் கூடும். ஆனால், பற்றற்ற துறவர்க்கும் வேண்டியிருக்குமோ என்னும் வினா எழுப்பலாம். விடையை வள்ளுவமே வரிந்து கூறுகின்றது.

நிலையில் மாறாத மலை அன்னவர் எனின் என்ன?

குணம் என்னும் குன்றம் ஏறி நின்றவர் எனின் என்ன?

பூனைக்கு வரும் சறுக்கல்போல் யானைக்கும் சறுக்கல் ஏற்பட்டு விடுவதில்லையா?

தம் தகவோடு பொருந்தாத செயலைச் செய்வாரும் உளர் என்பதால்தானே, 'தம்மோடு கொள்ளாத கொள்ளாது உலகு' என்று நெறியுரைத்து எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் என வலியுறுத்தினர்ர்.

அம்மட்டோ? குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ குன்றி அனைய செயின் என்றாரே! குன்றியை ஏன் காட்டினார்? குன்றினும் மிகக் குன்றியது குன்றி என்பதற்கோ? ஆம்! அதற்கும்தான்; அதனொடு குன்றியின் சிவப்பென்ன? அதன் முகப்பில் அமைந்த கறுப்பு என்ன? வெளிப்படத் தெரியும் சிவப்பு மறைந்து கிடக்கும் கறுப்பு எனத் தவம் காட்டி, தவம் புரிவார்க்கு விளக்கமாக நிற்க வில்லையா? "மைபொதி விளக்கே என்ன, மனத்தினுள் கறுப்பு வைத்து" என்று முத்த நாதனைக் கூறுவாரே சேக்கிழார்.

போலித்துறவி கூடா ஒழுக்கத்தான் எனின், மனவலிமை-கட்டொழுங்கு-குன்றிய பற்றற்றாரும் இருக்கக்கூடும் தானே! அவர்க்குத் தளர்ச்சிப் போதில் - சறுக்கும் வேளையில் - ஊன்றுகோலாக இருந்து காப்பார் வேண்டுமே! அவர் மிக வலியராக இருப்பின் தானே பாதுகாப்பாக முடியும்!

மரத்தைப் பற்றிக்கொள்ளும் கொடி, வலுப் பெற்று விடுகிறதே! பருமரத்தை அண்டிய பல்லியும் பிழைக்கும் என்பதுபழமொழி ஆயிற்றே. ‘பெரியாரைத் துணைக்கோடல்’ என்பது திருக்குறள் விளக்கம் ஆயிற்றே.

அலையில் அலைக்கழிவானுக்குக் கட்டுமரம் கைக்கு எட்டுவது எவ்வளவு பேறு!

மரத்தில் இருந்து வீழ்வானைத் தாங்கிக் கொள்ளும் வலியாளன் வாய்ப்பது எத்தகைய வாய்ப்பு!

அவ்வாறே பற்றற்றான் அப்பற்றற்ற தன்மையை உறுதிப் பற்றாகக் கொண்டிருக்க அவனினும் வலிய பற்றற்றான் வேண்டும் என்பது தெளிந்து தேர்ந்த கட்டளையாம்.

‘மனம்’ நன்றாக இருத்தல் நன்றே. அதன் மாறா நலத்திற்கு ‘இனம்’ நன்றாக இருக்கவேண்டும் அல்லவோ!

சான்றோர்க்கு அவரின் மேம்பட்ட சான்றோரும் பண்பாட்டோர்க்கு அவரின் மேம்பட்ட பண்பாட்டோரும் உறவாய் இருக்கும் உயர்வு போலப் பற்றற்றோர்க்குப் பற்றற்றோர் உறவு வேண்டும் என்பது வாழ்வியல் தெளிவாம். ஆதலால் பற்றுதல் என்பது, பற்றற்றாரைப் பற்றும் பற்றுமையே என்பது விளக்கமாம்.

## 7. காமத்துப் பால் காமசூத்திர வழிவந்ததா?

தமிழ் நெறித் தழைப்பில் வந்த நூல் திருக்குறள். அதன் காமத்துப்பாலோ, தொல்காப்பித்தின் இலக்கிய மாக வெளிவந்தது. எனினும் 'காமசூத்திர'த்தின் வழிவந்தது 'காமத்துப்பால்' எனப் 'புரியார்' மட்டு மல்லாமல் புரிந்தார் சிலரும் வலிந்துரைத்து வருகின்றனர்.

அறத்துப்பால் 'மனுநீதி சாத்திர' வழிபட்டது என்றும் பொருட் பால் 'அர்த்தசாத்திர' வழிப்பட்டது என்றும் கூறுபவர், 'காமப்' பெயரொற்றுமை கண்ட அளவில், விட்டுவைப்பாரோ?

தமிழ்த் திறம் மாறாத் தகவில் அமைந்தது, திருக்குறள் காமத்துப்பால் என்பதை, அதன் அதிகாரப் பெயராலும், வைப்பு முறையாலுமே வெளிப்பட அறியலாம்.

தமிழர்க்குத் தனிச் சிறப்பாக அமைந்தது பொரு ளிலக்கணம். அப்பொருள், அகம், புறம் என இருபாற் படும். அவ்வகப்பொருள் முதல், கரு, உரி, யென முப் பகுப்புறும். அம் முப்பொருள்களுள் முதலிற் கருவும், கருவில் உரியும் உயர்ந்தவை என்பது தொல்லாசிரியர் துணிவு. அவ்வுரிப்பொருளே பொருளாக அமைந்தது திருக்குறள் காமத்துப்பால்.

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், என்பனவும் இவற்றின் நிமித்தமும் உரிப்பொருள்கள்

என ஒழுங்கில் வைத்தார் தொல்காப்பியர். (அகத். 14). இவ்வொழுங்கில் ஒரு சிறு மாற்றமும் செய்யாமல், அப்படியே போற்றிக் கொண்டார் திருவள்ளுவர்.

ஐந்திணை பற்றிக் கூறும் எத்தமிழ் நூலும் தொல்காப்பியர் வகுத்த உரிப்பொருள் வைப்பு முறையை அப்படியே போற்றிக்கொள்ளவில்லை என்பதை ஆய்ந்து காண்பார், வள்ளுவர் கொண்ட தொல்காப்பியக் கடைப்பிடியை வளமாக அறிவர்!

காமத்துப் பால் 25 அதிகாரங்களைக் கொண்டது. தமிழ்நெறி உரிப்பொருள்களோ ஐவகைப் பட்டவை. ஆகலின், ஓர் உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்க ஐந்ததிகாரமாய், ஐந்து உரிப்பொருள்களுக்கும் ஐந்தைந்து அதிகாரங்கள் பாடித் தமிழ் நெறியை மெய்ப்பித்தார் தவ வள்ளுவர்.

அ. புணர்தலாகிய உரிப் பொருளையும் அதன் சார்பையும் விளக்கும் முதல் ஐந்து அதிகாரங்கள்.

1. தகையணங்குறுத்தல்
2. குறிப்பறிதல்
3. புணர்ச்சி மகிழ்தல்
4. நலம் புனைந்துரைத்தல்
5. காதற் சிறப்புரைத்தல்.

ஆ. பிரிதலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்கும் இரண்டாம் ஐந்து அதிகாரங்கள்.

1. நாணுத்துறவுரைத்தல்
2. அலரறிவுறுத்தல்
3. பிரிவாற்றாமை

4. படர்மெலிந்திரங்கல்

5. கண்விதுப்பழிதல்

இ. இருத்தலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்கும் மூன்றாம் ஐந்து அதிகாரங்கள்

1. பசப்புறு பரவரல்

2. தனிப்படர் மிகுதி

3. நினைந்தவர் புலம்பல்

4. கனவுநிலை யுரைத்தல்

5. பொழுது கண்டிரங்கல்

ஈ. இரங்கலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்கும் நான்காம் ஐந்து அதிகாரங்கள்.

1. உறுப்புநலனழிதல்

2. நெஞ்சொடு கிளத்தல்

3. நிறையழிதல்

4. அவர்வயின் விதும்பல்

5. குறிப்பறிவுறுத்தல்

உ. ஊடலாகிய உரிப்பொருளையும் அதன் சார்பையும் விளக்கும் ஐந்தாம் ஐந்து அதிகாரங்கள்

1. புணர்ச்சி விதும்பல்

2. நெஞ்சொடு புலத்தல்

3. புலவி

4. புலவி நுணுக்கம்

5. ஊடலுவகை

ஒவ்வோர் ஐந்தனுள்ளும், இடை நின்றது உரிப் பொருளையும் முன்னும் பின்னும் உள்ளவை அதன் சார்நிலைகளையும் விளக்கி நிற்றல் கண்டுகொள்க.

"இத் தமிழ் நெறியை உரையாசிரியர்கள் அறியாரோ, பதிப்பாசிரியர்கள் பாராரோ" எனின் அவர்கள் அறிந்தனர்; பார்த்தனர் என்பது மறுமொழியாம்.

1904-ஆம் ஆண்டில் தி. செல்வக் கேசவராயரால் 'திருவள்ளுவர்' என்னும் நூல் இயற்றப்பட்டு வெளிப் பட்டது. அந்நூலில், "காமத்துப்பால் கூறுவார் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் ஐந்திணையும் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றனுட் பெரும்பான்மையும் உரிப்பொருள் பற்றிப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி எனவும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலை எனவும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லை எனவும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் எனவும், ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதம் எனவும் ஒரே ஒரு நிலம் ஐந்து அதிகாரமாக இருபத்தைந் ததிகாரத்தாற் கூறினார் என்னும் அருஞ்செய்தி வந்துள்ளது. அச்செய்தி செல்வக்கேசவர் 'கண்டுரை'யோ எனின், 'பண்டுரையே'யாம். அது மணக்குட வருரை என்னும் குறிப்புள்ளது. (பக்கம் 29) ஆனால் மணக்குட வருரைப் பதிப்புகளில் இப்பகுதி காணப்படவில்லை.

இஃதிவ்வாறாக 1912இல் அறிஞர் மு. இராகவரின் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' வெளிப் பட்டது. அதன் 48ஆம் பக்கத்தின் அடிக்குறிப்பாக "காமத்துப்பாலைப் பெரும்பான்மை வடநூல் வழக்குப் பற்றியும் வள்ளுவர் கூறினர் என்பதே பரிமேலழகர் கருத்து. ஆயினும் மற்றொருசார் உரையாசிரியர் தமிழ் வழக்கே பற்றி அக்காமப் பகுதி ஓதப்பட்டதென்று கூறுவர்; அஃதாவது, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம்,

நெய்தல் என்று ஐந்திணைகளையும், முதல் கருஉரிப் பொருள்களுள் பெரும்பான்மை உரிப்பொருள் பற்றி-திணையொன்றற்கு ஐந்ததிகாரமாக-இருபத்தைந் ததிகாரங்களாற் காமத்துப்பால் கூறப்பட்டது, என்ப தாம்" என்பது அது. இதனைக் குறிக்கும் இராகவர். 1910ஆம் வருஷம் என்னாற் பதிக்கப்பட்ட திருக்குறட் பரிமேலழகருரைப் (Packet Size) பதிப்பினுள் திருவள்ளு வரைப் பற்றிய குறிப்பு 16ஆம் பக்கம் பார்க்க" என்றும் தம் முதற் பதிப்புச் செய்தியையும் ஆங்குச் சுட்டுகிறார். எனினும் செல்வக்கேசவர் போல, "மணக்குடவர்" பெயரைக் குறித்தார் அல்லர்.

இஃதிவ்வாறாக வெளிவந்துள்ள "மணக்குடவர்" உரைப்பதிப்புகளின் காமத்துப்பால் முகப்பில், "இதனுள் தகையணங் குறுத்தல் முதலாகப் புணர்ச்சி மகிழ்தல் ஈறாக அருமையிற்கூடலும் அதற்கு நிமித்த மும் ஆகிய அதிகாரம் **மூன்றும்** நலம்புனைந்துரைத்தல் முதலாகப் புணர்ச்சி விதும்பல் ஈறாகப் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் **பதி னெட்டும்,** நெஞ்சொடு புலத்தல் முதலாக ஊடலுவகை ஈறாகஊடிக்கூடலும் அதற்குநிமித்தமும் ஆகிய அதி காரம் **நான்கும்.** ஆக இருபத்தைந்ததிகாரம் கூறப் பட்டது" என்னும் செய்தியே இடம் பெற்றுள்ளது.

செல்வக் கேசவர் குறிப்பிட்டுள்ளவாறு மணக் குடவர் உரைச் சுவடியில் இப்பகுதி இருந்திருக்கு மாயின் இதனை ஏட்டிலிருந்து பெயர்த்து எழுதினோர் -பதிப்பித்தோர் விடுத்துள்ளனரோ என ஐயம் கிளைத்தல் உறுதி! ஆனால் அவ்வையம் அகற்றுதற் குரிய குறிப்பு ஒன்று 'செந்தமிழ்' முதல் தொகுதியில்

(பக். 246. ஆண்டு 1903) இடம் பெற்றுள்ளது. அச்செய்தி கொண்டே, செல்வக்கேசவரும் இக்குறிப்பை எடுத் துள்ளார் என்பதும் வெளிப்படுகின்றது.

இவ்வுரைப் பாயிரம் இராமநாதபுரத்தைச் சார்ந்த துன்படக்கிக்கோட்டை முத்து வயிரவ நாதப் புலவர் வீட்டுத் திருக்குறட்பரிமேலழகருரையேட்டினும், திருநெல்வேலி வண்ணாரப்பேட்டைத் திருப்பாற் கடனாத கவிராயர் வீட்டு அவ்வுரையேட்டினும் வேறாக எழுதப்பட்டிருந்தது" என்பது அக்குறிப்பாகும். இப்பாயிரம் பரிமேலழகர் உரை ஏட்டுப் படியொடு இருந்தது. ஆனால், வேறாக எழுதப்பட்டிருந்தது. என்பது இக்குறிப்பால் வெளிப்படும். இரண்டு படிகளில் இவ்வொரு செய்தி ஒப்ப இருந்தமையால் 'ஒருசாராசிரியர் கருத்து' இஃதெனக் கட்டுரை ஆசிரியர் பெரும் பேராசிரியர் இரா. இராகவனார் குறித்தார்.

பொருட்பால் காமத்துப் பால்களின் தொடக்கத் தில் முன்னுரைப் பகுதி மணக்குடவர் உரையில் காணப்படுகிறது. நூலின் தொடக்கத்தில் நூல் முழு வதையும் தழுவிய முன்னுரை நூலில் காணப்பெறாமை யால், பரிமேலழகர் உரையில் தவறாகக் கிடைத்த முன்னுரைப் பகுதியை மணக்குடவருரையெனச் செல்வக் கேசவராயர் கொண்டிருக்கக் கூடும்! அவ்வாறு கொள்ளுதற்குக் கூடாமை, கிடைத்துள்ள பொருட்பால், காமத்துப்பால் முன்னுரைகளின் முரண்பாட்டாலேயே அவ்வுரை மணக்குடவர் உரை யன்று என்பது வெளிப்படுகின்றது.

இஃதிவ்வாறாகப் பரிமேலழகர் உரைப் பாயிரத்தின் வேறாகக் கிடைத்துள்ள உரைப்பாயிரம் உள்ளங்கை ஒளிமணியாகக் காட்டுதல் உண்மையால் அஃது ஏற்றுப் போற்றத்தக்கதாம். தமிழ் நெறியின் 'கட்டளைக் கல்' லாகத் திகழும் காமத்துப்பால் **காம சூத்திர வழிப்பட்ட தன்று** என்பது மெய்மையாம்.

## 8. உலகளாவிய உயர் குறள்

திருவள்ளுவர் தனித்தனி மாந்தர்களின் நாடி பிடித்துப் பார்த்து ஒரு நூல் இயற்றியவர்; அத்தனி மாந்தர் ஒவ்வொருவரும், தாம் **உலகவராக உணர்ந்து உலகோம்ப வேண்டும்** என அந்நூலை இயற்றியவர்.

ஒரு நீர் நிலையில் விழுந்த கனி, வீழ்ந்த இடத்தில் ஓர் அலை எழுப்பி, அவ்வலை விரிந்து விரிந்து முழுநீர் நிலையையும் தழுவினாற் போல, ஒவ்வொருவரும் உலகளாவிய பார்வையர் ஆதல் வேண்டுமென நூலின் எழுவாய் முதல் இறுவாய்வரை வலியுறுத்தியவர்.

அவர் **உலகவர்** என்பது, 'அகரமுதல் கொண்டு உலகமுதல்' காட்டிய முதற் குறளிலேயே புலப்படு கிறது. உலகோம்பும் ஒருபெரும் முதலை ஒவ்வொரு வரும் அவரவர் நிலையில் பார்த்தாலும் பெயரிட்டா லும், அம்முதலின் பொதுமையைப் போற்றுதலால் அல்லாமல், தனிப்படுத்திப் பார்த்ததால் உலக ஒருமை கிட்டாது - வாய்க்காது - என்பாராய் அம்முத்திரையை முதற்குறளிலேயே பதித்து வைத்தார். **உலகம்** என்பது கல்லா மண்ணா, அருவியா ஆறா, மரமா செடியா, புழுவா பறவையா? இன்னவையே உலகம் எனின், நூல் இயற்றிப் பயன் என்ன? அறங் கூறி ஆவதென்ன?

உலகம் என்பது உயர்மாந்தரைச் சுட்டுவது. "பண்புடையார்ப் பட்டுண் டுலகம்" என்பது வள்ளுவம். அப்பண்புடையார் காலம் காலம் ஆகக்

காத்துவரும் பண்பாட்டுக் காவலே, உலகியலைக் காத்து வருகிறது. மனச்சான்றைத் தட்டி யெழுப்பும் மாசற்றோர் தொண்டே, மாப்பெருந் தொண்டு! அதுவே உலகை உய்விக்கும் உயர்கருவி.

வள்ளுவ வாழ்வாகத் திகழ்ந்தவர் தமிழ்த் தென்றல் **திரு. வி. க.** திருக்குறள் பத்து அதிகாரங் களுக்குப் பேருரை கண்டவர் அவர். அதன் தோற்றுவாயில் எழுதுகிறார்.

"திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும் போதே, உலகமும் உடன் தோன்றுகின்றது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணமென்ன?

காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்துதற் குரிய கருவியும் ஆகும்.

திருக்குறளை ஆராய்ந்தால், அதன்கண் உலகம் இருத்தல் நன்கு புலனாகும். திருவள்ளுவர் **உலகையே குறளாக எழுதினார். உலகின் எழுத்தோவியம் திருக்குறள்** என்று கூறலாம்.

திருவள்ளுவர் உலகுக்கு என்றே பயின்றார்; உலகுக்கு என்றே வாழ்ந்தார், அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. **அவர் உலகம் ஆயினார். உலகம் அவராயிற்று.** இத்தகைய ஒருவரிடமிருந்து பரிணமித்த ஒரு நூல் எந்நினைவை யூட்டும். அஃது உலக நினைவை ஊட்டுதல் இயல்பே. ஆகவே திருவள்ளுவர் நினைவு தோன்றும் போது உலகமும் உடன் தோன்றுவதில் வியப்பு ஒன்றுமில்லை" என்பது அது.

இனி, அதே திரு. வி. க. **அறிஞர் மு. வ.** இயற்றிய திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் நூலுக்கு முகவுரை வரைந்தார். அவ்வுரையிலும் திருக்குறள் உலக நூல் என்பதை உறுதிசெய்கிறார்.

திருவள்ளுவர் நூல் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது. அறமும் பொருளும் காதலும் ஒரு வகுப்பார்க்கோ ஒருமதத்தார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்கு - உலகுக்குப் பொது.

"திருக்குறளில் எழுவாய்முதல் இறுவாய்வரை உலகு என்னும் சொல்லும் பொதுமைப் பொருள் உணர்த்தும் சொற்களும் சொற்றொடர்களும் தக்க இடங்களில் திகழ்கின்றன. இன்னோரன்ன குறிப்புகள் திருக்குறள் உலக நூல் என்பதை வலியுறுத்துவன" என்றும்,

"திருக்குறளின் உள்ளக் கிடக்கையைப் பலபடக் கூறலாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர்வது ஒன்று. அஃது **உலகம் ஒருகுலம்** என்பது. உலகம் ஒருகுலம் என்பது பழந்தமிழ்ப் பண்பாட்டினின்றும் முகிழ்த்த ஒரு பெருங்குறிக்கோள். அக்குறிக்கோள் திருவள்ளு வருள் படிந்துநின்று வளர்ந்து ஒரு சீரிய உலக நூலாயிற்று. அந்நூலின் உள்ளுறை நுண்ணியதாய்ப் பேரறிஞர் பலரிடம் புகுந்து புகுந்து பல மொழிகளில் சிறப்புற்றது. இவ்வாறு திருவள்ளுவர் கருத்துப் பெருகிப் பெருகி இந்நாள் விஞ்ஞானத்தில் விராவி **மார்க்கிய மாகவும்** தெய்விகத்தில் கலந்து **காந்தியமாகவும்** பரவியுள்ளது. விஞ்ஞான மாக்கியமும் தெய்விகக் காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக்கால

உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இதை உணர்ந்து தொண்டாற்ற நம் நாடு முற்பட்டால் உலகம் நலம்பெறும்" என்றும் கூறினார்.

"தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார், மக்கள் உய்யத் திருவாய் மலர்ந்தருளிய தமிழ்மறை **உலகிருள் அகற்ற வந்த ஒற்றைத் தனியாழிப் பரிதி"** என்று நாகை சொ. **தண்டபாணியார்** குறிப்பிடுவார்.

நம்மவர் மதிப்பீடு இஃது என்றால், **உலகவர்,** உலகநூல் திருக்குறள் என ஒப்புகின்றனரா?

"வள்ளுவர் தம் குறளில் எளிய உயரிய வாழ்க்கையை முயற்சியின்றிச் சிந்தித்துள்ளார். மனிதன் தனக்குத் தானே செய்து கொள்ள வேண்டிய கடமைகள், உலகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகள் முதலிய பலதரப்பட்ட கேள்விகளுக்கு வள்ளுவர் தரும் விடைகள் பெருந்தன்மையுடையன; அறிவுக்குப் பொருந்துவன; இத்தகைய உயரிய அறிவுநிறை முதுமொழிகளை **உலக இலக்கியங்கள் எவற்றினும் காண இயலாது"** என்கிறார் **ஆல்பர்ட் சுவைட்சர்.**

"திருக்குறளை நன்றாய்க் கற்பவர்களுக்கு வேறு கல்வி வேண்டியது இல்லை என்பது என் துணிவு. பேரறிஞர் **மெக்காலே** பெருமகனார் புத்தகக் களஞ்சியம் முழுவதையும் விட இவ்வற்புத நூலொன்று மட்டும் சாலச் சிறந்தது என்றும், மனித இனத்திற்கு அதிக நன்மை பயக்கக் கூடியது என்றும் எண்ணுகிறேன்" என்கிறார் துறவர் எம். **மிக்கேல்.**

**அறிஞர் துறு** என்பார், "ஒரு பிரிவினர்க்கே உரிய கோட்பாடுகளைக் கொள்ளாது விலக்கி, உலக மக்கள் அனைவருக்கும் ஒருங்கே பொருந்தும் உண்மை

களையே தெரிந்தெடுத்துத் திருவள்ளுவர் மொழிந் துள்ளார். என்கிறார்.

"ஒருநாள் வழக்கப்படி திருக்குறள் படித்தபோது 'தாமின் புறுவ துலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந் தார்' எனக் குறள் ஒன்று தென்பட்டது. அதைப் பார்த்துத் தமிழர்கள் திருக்குறளைப்படித்துச் சுவைப் பது போல் உருசியக்காரர்களும் படித்துச் சுவைக்கு மாறு எற்பாடு செய்யலாமா என்று நினைத்துக் கொண்டேன்" என்கிறார் எம். **அந்திரனோவ்**.

உணர்ந்து பாராட்டுதல் உயர்ந்ததே; அதனினும் உயர்ந்தது, உலகவர் ஒப்புக்கொண்டு அதன் வழியில் செயல்படுதல் அல்லவா!

**காந்தியடிகள்** தமிழகச் சுற்றுலாக் கொண்ட போது, அவர்க்கு வழங்கப்பட்ட வரவேற்பிதழ்களில் சில திருக்குறள்கள் இடம் பெற்றன. இதனைக் கண்ட அடிகளார், "திருக்குறளைப் பற்றிச் சில செம் மொழிகள் உங்கள் வரவேற்பில் மிளிர்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் **திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும்** என்று என் உள்ளத்தில் எழுந்த ஆர்வமேயாம்" என்கிறார்.

காந்தியடிகளுக்குத் **தால்சுதாய்** அவர்களின் மேல் பற்றுமை மிகுதி. அவர் எழுதிய '**போரும் அமைதியும்**' என்னும், கொள்கை நூல்வழி எற்பட்டது அப்பற்றுமை. அதனால், ஆபிரிக்காவில் அடிகளார், 'தால்சுதாய் பண்ணை' என ஒரு நிறுவனத்தை அமைத்தார். தால்சுதாய்க்கும் எழுதினார்.

தால்சுதாய் 1906 இல், 'இந்து ஒருவருக்கு எழுதப்படும் கடிதம்' என்பதை எழுதியுள்ளார். 'அதில் திருக்குறளைக் குறிப்பிட்டு அந்நூலில் தம் உள்ளம் கவர்ந்த குறட்பாக்கள் சிலவற்றை எழுதி விளக்கினார். அக்குறள்கள் **இன்னா செய்யாமை** என்னும் அதி காரக் குறள்கள் ஆகும். அக்குறள்களே, அறநெறியில் போராடுவதைப் பற்றிய அவருடைய சிந்தனைக்கு உரமாக அமைந்தன. தால்சுதாய் எழுதிய கடிதத்தால் தான் காந்தியடிகள் திருக்குறளை அறிந்து கொண்டு **ஏரியல்** என்பார் மொழிபெயர்த்த பிரெஞ்சு மொழி பெயர்ப்பு நூலைப் படித்து அதன் சிறப்புணர்ந்தார்.

**இங்கர்சால்** என்னும் பகுத்தறிவாளர், திருக்குற ளிடத்துப் பேரீடுபாடு கொண்டார். திருவள்ளு வருடைய கட்டற்ற சிந்தனைப் போக்கும், அறிவை முதன்மையாகப் போற்றும் பண்பும் அவரை வயப் படுத்தின.

***"அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்***
***உள்ளழிக்க லாகா அரண்"*** (421)

***"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு."*** (355)

***"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு."*** (425)

என்னும் குறள்களை மேற்கோள் காட்டிப் பேசுதலை மேற்கொண்டார்.

***"இருகநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு***
***நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து."***

என்பது **ஓமியோபதி** (ஒல்லியல்) மருத்துவ இலக் கணம் போல்வது. அது, "எது நோயை ஆக்குகிறதோ அதுவே அந்நோயைத் தீர்ப்பதும் ஆகும்" என்பது.

இதன் பொருள், ஆழத்திலும் கலை அழகிலும் ஈடு பட்டார் செருமானிய அறிஞர் **கால் கிரௌல்** என்பார். அவ்வீடுபாடு அவரை 1754ல் செருமனிய மொழியிலும் 1756இல் இலத்தின் மொழியிலும் திருக்குறளைப் பெயர்க்கச் செய்தது.

உருசிய நாட்டு விண்வெளிவீரர் '**ஆம்சுடிராங்கு**' சென்னைக்கு வந்தார். அவருக்கு வரவேற்பு வழங்கப் பட்டது. அவ்வரங்கில்,

> ***"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்***
> ***வானம் நணிய துடைத்து"*** (353)

என்னும் குறளின் பெயர்ப்பு இருந்தது. அதனைக் கண்ட அவ்வீரர், இதனைக் கூறிய அறிவியல் அறிஞர் யார்? என்று வினாவினார். விளக்கம் பெற்றார்.

"சென்று அளந்து அறிந்தோர் போல இனைத்து என்மரும் உளரே" என்றும் புறநானூற்று விண்வெளிச் செய்தியும், "வளிஇடை வழங்கா வான"மும், 'பாழ்' என்பதும், 'வலவன் ஏவா வான ஊர்தியும்,' நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டத் தொகுதியும் பிறவுமாகிய அறிவியல் மலர்ந்த மண் வீழ்ந்துபட்ட வீழ்ச்சியால், "தமிழில் அறிவியல் இல்லை; தமிழின் வழி அறிவியல் கற்பிக்க இயலாது" என்னும் முட்டுக்கட்டைகளுக்கு உறைவாகிப் போயிற்று.

இந் நிலையிலும் திருக்குறள் தோன்றிய சிறப்பால் அவ்வப்போது உலகவர் பார்வைக்கு உரியதாகத் திகழ்கின்றது. இதனாலேயே,

> ***"வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து***
> ***வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"***

என்று பாரதியாரால் மதிப்பிடப்பட்டது.

உலகந்தழுவிய நூல் திருக்குறள் என்பதைத் தமிழ்ச் சான்றோர் வழியாகவும் உலகப்பெருமக்கள் வழியாகவும் கண்டோம். உலகவர் மதித்துப், போற்றிய மாண்பையும் நோக்கினோம். இனி வள்ளுவம் கொண்ட '**உலகப்பார்வை**'யை நோக்கலாம்.

***"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்"*** (140)

***"உலகம் தழீஇயது ஒட்பம்"*** (425)

***"எவ்வது உறைவது உலகம்; உலகத்தோடு***
***அவ்வது உறைவது அறிவு"*** (426)

***"உலகத்தார் உண்டு என்பது இல்லென்பான்"*** (850)

***"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்"*** (996)

***"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"*** (1031)

இவ்வாறு உலகம் சுட்டும் குறள்கள் ஒன்றா இரண்டா?

உலகம், உலகு என வருவன 51 இடங்கள்

வியனுலகம் என வரும் இடம் இரண்டு.

வியனுலகாவது, பேரண்டம்.

ஞாலம் வரும் இடங்கள் ஐந்து.

வியன் ஞாலம் வருமிடம் ஒன்று.

வைப்பு, வையம், வையகம் என வரும் இடங்கள் பத்தொன்பது.

"வளி வழங்கும் மல்லல்மா ஞாலம்" என ஈடிணையில்லா அடை நயம் கொண்டு நடையிடுவது ஒரு குறள்.

***"அல்லல் அருளாள்வார்க் கில்லை; வளிவழங்கும்***
***மல்லல்மா ஞாலம் கரி"*** (245)

என்னும் குறள், உலகை விரிய விரிய நோக்கி உரைகாண ஏவும் குறளாம்.

வளியாகிய காற்று, கண்ணில் புலப்படுகிறதா? புலப்படவில்லை என்பதால் 'இல்லை' எனலாமா? காற்றுத் தோன்றவில்லை எனினும், அதன் விசிறுதல் புலப்படத்தானே செய்கிறது!

வையகமாகிய உலகம் வைத்திருக்கும் வளங்கள் தாம் எத்தனை எத்தனை? அவ்வளங்கள் எல்லாம் கண்ணுக்குப் புலப்படவா செய்கின்றன? புதிது புதிதாகக் கிளரவில்லையா?

இந்த உலகம் எவ்வளவு பெரியது? புலப்படு கிறதா கண்ணில்? பார்க்கும் அளவில் அடங்கியா போயது உலகம் - பேருலகம்.

இந்த உலகம் வெளியில் தொங்குகிறது; சுழல் கிறது; அச் சுழற்சியும் வலமாக இயங்குகிறது; உண்டை வடிவாக இருக்கிறது - இவ்வளவும் பார்த்த பார்வை யில் புலப்பட்டு விட்டதா? ஆனால் இவையெல்லாம் உண்மை அல்லவா! அதுபோல், அல்லல் அருளாள் வார்க்கு இல்லை என்பதும் உண்மை. அதனை உலகலாவிய பார்வை பார்த்தே உறுதிசெய்! என்கிறது வள்ளுவம்.

அல்லல் அருளாள்வார்க்கு இல்லை என்பதை எவர் வரலாறு கொண்டு மெய்ப்பிப்பது?

**மெய்ப்பொருள் நாயனார்** என்பார் ஒருவர் இருந்தார். அவரைச் சிவனடியார் வேடம் கொண்ட முத்த நாதன் நல்லுரை கூற வந்தான் போல் கொல்லுதல் குறியானான். குத்துப்பட்டுக் குருதி சோர வீழும் மெய்ப்பொருளாரைக் கண்ட வாயில் காவலன் தத்தன் ஓடிவந்து முத்தநாதனை வாளால் வெட்டத் துணிந்

தான். மெய்ப்பொருளார்" தத்தா! வெட்டாதே! அவர் நம்மவர்" என்றார்.

குத்துப்பட்டுச் சாவார் ஒருவர், குத்தியவரை 'நம்மவர்' என்று சொன்னால் அவர் குத்தினைத் தொல்லை எனக் கொண்டவர் ஆவாரோ? குத்தினைத் தொல்லை எனக் கருதியிருந்தால் குத்தியவனை நம்மவர் என்னமாட்டார்! அவனைக் கொல்ல வந்தவனைத் தடுத்திரார்! பாவி-பழிகாரன் எனப் பழிக்கும் எண்ணம் வந்திருக்குமேயன்றிப் பரிவுரை வெளிப்பட்டிராதே!

நம்மவர் கண்காண நிகழ்ந்ததே! **காந்தியடிகளைச்** சுடவில்லையா? சூடுபட்டவர் வாய், சுட்டவனைப் பழித்ததா? பிடி, அடி, கொல் என ஏவியதா? "ஏ! இராம்!" என்று அடிகளார் வாய் சொல்லியதே! ஏன்? அல்லல் அருள் வாழ்வார்க்கு - அருள் ஆள்வார்க்கு - இல்லை என்பது தானே அது!

**கிறித்து** சிலுவையில் அறையப்பட்டார். தம்மைச் சிலுவையில் அறைபவரைக் கொடுமையானவர்களாகக் கூறாமல் - பழியாமல் - "இறைவனே இவர்கள் அறியாது செய்கிறார்கள். இவர்களைப் பொறுத்தருளும்" என்றாரே! சிலுவைப்பாட்டை அல்லல் எனக் கொண்டிருந்தால் இப்படிச் சொல்ல முடியுமா?

அல்லல் அருளாள்வார்க்கு இல்லை என்பது தெளிவுதானே!

கூறிய சான்றுகள் எல்லாமும் வள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்டவை அல்லவா! அவரால் அறியப்படாதவற்றைச் சான்றாக்கி உறுதிப்படுத்தலாமா என வினா எழும்.

*நாம் அறிந்த சான்றுகள் இவை என்றால், வள்ளுவர் அறிந்த சான்றுகள் எவை எவையோ; நாம் அறியோம்! பின்னே, உலகியலில் நடந்தவைபோல முன்னே நடந்ததில்லை என முடியாதே!*

*அவ்வாறானால், அதனைச் சுட்டிக் கூறியிருக்கலாமே வள்ளுவர் என்னின், அந்நூல் உலகநூல் ஆகியிராது என்பதே மறுமொழியாம்.*

***அடிப்படைக் கொள்கை அதுவே. அது மாறாது. ஆனால், அக்கொள்கையுடைய ஆள் மாறாமல் இராரே! மாறும் ஆளை விடுத்து மாறாக் கொள்கை பேசுவதையே நோக்கமாகக் கொண்டதாலேயே வள்ளுவம் உலக நூலாக உலகோரால் கொள்ளப்படுகிறது*** *என்க.*

*அன்பு, அறம், அருள், வாய்மை, அறிவு, அரசு, ஆள்வினை, ஊழ், அகவாழ்வு, புறவாழ்வு என்னும் இன்னவை மாறுவனவா? இல்லாமல் அகல்வனவா? அகன்றால் அஃது உலகம் ஆகுமா?*

*மாறுதல் இயற்கையுடைய உலகத்தில், மாறாப் பொருள்கள் எவை எவையோ அவற்றைக் கூறுவதாலேயே வள்ளுவம் உலகநூல் ஆயிற்று. தனி ஒருவரைச் சொல்லாமல், உலகுவாழ்வார் ஒவ்வொருவரையும் அவரவர்க்கு உரியதாகக் கொள்ளும் வகையில், பொது நோக்கில் கூறியமையால் உலக நூல் ஆகத் திகழ்கிறதாம்.*

*ஆளைப் பெயர் சொல்லிப் பாடாமல், அறம் பாடிய நூல் திருவள்ளுவர் நூல். கற்பார் ஒவ்வொருவர்க்கும் உரிமை பூண்ட நூல் திருக்குறள். அதன் முழுதுறு பார்வையும் உலகு, உலகு என்று கொண்*

டமையாலேதான், தான் பிறந்த மண்ணின் பெயரையோ, தன்னையுடைய மொழியின் பெயரையோ, தன் மண்ணாள் அரசுகளின் பெயர்களையோ, தன் நாளிலோ முந்தோ வாழ்ந்த அறிவோர் அருளாளர் பெயர்களையோ, வழிபட்டுவந்த இறைமைக் குறியீட்டுப் பெயரையோ திருக்குறள் கொண்டிருக்கவில்லை என்பதை எண்ணினால் வள்ளுவர்தம், ஆழ்ந்து அகன்ற நுண்ணிய உலகப் பார்வை தெள்ளிதில் புலனாம்.

***"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே***
***நிகழ்ச்சி அவர்கட்டாக லானே"***

என்பது முந்தைத் தமிழ் இலக்கணம்.

உயர்ந்தோர் ஒழுக்கமே ஒழுக்கம்; அவர் கொள்கையே அறம்; அவ்ர் இறையாணை வழி நிற்பவர்; ஆளும் இறையாணைக்கு அவர் மூலமாவரே யன்றி, ஆளும் இறையாணைக்குக் கட்டுப்பட்டு வாழும் வாழ்வினர் அல்லர் அவர். மனச்சான்றே வாழ்வாகி மாறா அறக்காவலராகத் திகழ்வார்க்கு வேறு எவர் ஆணை வேண்டும்? இதனால் தான், கடனென்ப நல்லவை எல்லாம்; கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு" என்று சான்றாண்மை தொடங்கும் வள்ளுவர்

***"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்***
***காழி எனப்படு வார்"*** (989)

என்றும்,

***"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்***
***தாங்காது மன்னோ பொறை"*** (990)

என்றும் நிறைவு செய்கின்றார். (அதி. 99)

உலகளாவிய உருவாக்க நாற்றங்கால் எது எனின், அது குடும்பம் என்பது வெளிப்படை. அதனால், மக்கட்பேறு கூறும் வள்ளுவர், "அறிவறிந்த மக்கட் பேற்றையே மக்கட்பேறு" எனச் சுட்டினார்.

மணி, முத்து, வயிரம், பொன், நிலபுலம், ஆடுமாடு என எவை எவை ஒருவர்க்கு இருப்பினும் அவை அவர் பொருள் ஆகும் சிறப்பின அல்ல. "தம்பொருள் என்ப தம் மக்கள்" என்றார். அம்மக்கள் அறிவினராக மட்டும் இருந்து பயனில்லை. மூளை நலத்தினும் உயர் நலம் நெஞ்ச நலம். அந்நலம் இல்லா மூளைவளம் உலகை அழிக்குமேயன்றி உலகுக்கு ஆக்கம் செய்யாது என்பா ராய்ச் சான்றோர் என்று பெற்றோர் தம் மக்களைப் பிறர் பாராட்டும் பாராட்டைக் கேட்கும் பேறு பெற வேண்டும் என்றார். அதிலும் குறிப்பாக அப்பண் பாட்டை உருவாக்கலில் தாய்க்கே முன்னுரிமை தந்தார் திருவள்ளுவர். அதனால் அப்பொறுப்பு தந்தைக்கு இல்லை என ஆகிவிடக் கூடாதே என்பாராய்,

> ***"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து***
> ***மன்னுயிர்க் கெல்லாம் இனிது"*** (68)

என்று பெற்றோர்தம் பொதுக்கடமை சுட்டினார்.

இனி, அறிவின் பயன்பாடு சுட்டும் இடத்திலும் திருவள்ளுவர் இதனை மறவாராய்,

> ***"அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதினோய்***
> ***தந்நோய்போல் போற்றாக் கடை"*** (315)

என்றார். அறிவுப் பயன் அருள்நிலையே என்பது வள்ளுவ உட்கிடையாதல் தெளிவாம்.

அருளுடைமையில் அருளாளர் இயல்பை,

***"மன்னுயிர் ஓம்பி அருளாள் வார்க்கில்லென்ப***
***தன்னுயிர் அஞ்சும் வினை"*** (244)

என்று கூறி, அதன் வரையறையாகவே,

***"அல்லல் அருளார்வார்க் கில்லை"***

என்றார். ஆதலால் வள்ளுவர் கண்ட உலகம் குடிமையில் இருந்தே கமழ வேண்டும் என்பதாதல் தெளிவாம்.

***"இற்பிறந்தார் கண்அல்ல தில்லை இயல்பாகச்***
***செப்பமும் நாணும் ஒருங்கு"*** (951)

என்னும் 'குடிமை'க் குறளும்

***"குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்***
***சுற்றமாச் சுற்றும் உலகு"*** (1025)

என்னும் 'குடிசெயல் வகை'க் குறளும் இவண் நோக்கி அறியத்தக்கன.

மக்கட் பிறவி எனப்பிறந்த பிறவி அனைத்துக்கும் கல்விக்கண் கட்டாயம் வேண்டும் என்பதால்தான்,

***"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*** (392)

என்றும்,

***"கண்ணுடையர் என்பவர் கற்றோர்"***

என்றும் வள்ளுவம் கூறியது.

கண்ணுடைய மாந்தப் பிறவிக்கெல்லாம் கல்வி யுடைமை கட்டாயம் என்பதை உவமையாலேயே புலப் படுத்தினார். புறக் கண்ணொளி இல்லார்க்கும் அகக் கண்ணொளியாம் கல்வி வேண்டும் என்பதால் தான்,

***"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து***
***ஆள்வினை இன்மை பழி"*** (618)

எனத் தெளிவித்தார். கல்வியறிவு வாய்க்கப் பெறாதார் இருப்பின் அவர் கேள்வியாலேனும் அறிவைப் பெறல் வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கல்விபெறா மக்களையுடைய அரசு, அரசு ஆகாது; அரசின் தலைக் கடனாவது கல்வி வழங்குதலே என்பதை வலியுறுத்துவாராய் இறைமாட்சியை அடுத்தே கல்வியை வைத்தார். (அதி. 39; 40)

ஒருவர் கல்வி கற்றல் உலக நலம் கருதியதே என்னும் தெளிவினராய்,

> **"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
> **சாந்துணையும் கல்லாத வாறு"** (397)

என்றும்,

> **"தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு**
> **காமுறுவர் கற்றறிந் தார்."** (399)

என்றும் கல்வி நோக்கத்தையும், நோக்க நிறைவேற்றக் கடனையும் குறிப்பிட்டார்.

கல்வியால் எந்நாடும் எம்நாடு என்றும், எவ்வூரும் எம் ஊர் என்றும் விரிவாக்கம் ஏற்படும்; அதனால், ஒருகாலத்தில் கற்றோம் என்று நிறுத்திவிடாமல் சாகுமளவும் கற்றல் வேண்டும் என்பது யாதானும் என்னும் குறளின் பொருள்.

தாம் எதனால் இன்பம் அடைகிறாரோ அதனால் உலகமும் இன்பம் அடைகிறது என்பதை உணர்ந்து கற்றறிந்தவர் அக்கல்வியில் பேரார்வம் கொள்வர் என்பது அடுத்த குறளின் கருத்து.

வள்ளுவர் கண்ட கல்வி உலகப்பொதுக் கல்வி. அதில் இன குல மத நிற பால் வேறுபாடு எதுவும்

இல்லை. மக்களாகப் பிறந்த அனைவர்க்கும் கல்வியே உயர் செல்வம் என்பதால்,

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"** (400)

எனக் கல்வியை நிறைவித்தார்.

கல்விப் பயன் இறைமைப் பயன் என்பாராய்க் கடவுள் வாழ்த்திலேயே,

**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"** (2)

என்றதும் அறியத் தக்கது. இதில் இறைவனை அறிவனாகக் கண்ட காட்சியும், அவ்விறைவனை அறவாழி அந்தணனாகக் (8) கண்ட மாட்சியும் வள்ளுவர்தம் மூலமுழக்கக் குறிப்பினவேயாம். அது,

**"அறிவென்பது அருளொடு கூடியதே"**

என்பதாம்.

இனி வள்ளுவ வாய்மொழிப் படி உலகவர் வாழ்வு அமைந்ததா, சான்றுகள் உண்டா எனின், அவை விரிவு மிக்கவை. எத்தனை எத்தனையோ குறள்மணிகள் உலகவர் வாழ்வாகத் திகழ்ந்துள்ளன; திகழ்கின்றன; வருங்கால உலகிலும் திகழும். எதனால் எனின்,

**"மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவர்"**

நூலாக வள்ளுவம் இருத்தலால்,.

1330 குறள்களும் உலகியல் வாழ்வாதலைக் கவிராச பண்டிதர் செகவீரபாண்டியனார் 1330 வெண்பாவாகப் பாடி விரிவான விளக்கம் வரைந்தார்.

நாம் இவண் நான்கு சான்றுகள் காணலாம். பார்ப்பவர் பார்வைக்குப் பாரகமே வள்ளுவச் சான்றாகத் திகழ்தல் உறுதி.

**வருவன நான்கும் உரைவீச்சு:**

பெல்சியத்தின் தலைநகர் புரூக்சேல். அது பகைவர் முற்றுகைக்கு ஆட்பட்டது. வலிய முற்றுகை. வன் கொடுமைத் தாக்குதல். நகரமே முழுமையாகக் கோட்டை கொத்தளங்களுடன் பற்றிக் கொள்ளப் பட்டது. ஒருவரும் வெளியேறிச் செல்ல இயலா நிலை.

படைத்தலைவன் பரிவொடும் நினைத்தான்.

"போர் அழிவில், போர் என்பதன் பொருளும் அறியா மழலையரும் இளையரும் இறந்துபட வேண்டுமா? போரில் பங்கிலா மகளிர் தாமும் மாண்டுவிட வேண்டுமா? வேண்டா! வேண்டா!" என்று நினைத்தான்.

"குழந்தையர் இளையர் மகளிர் ஆகியோர் கோட்டையை விட்டு வெளியே செல்லலாம்; வேண்டும் இடம் போகலாம். செல்லும் போது அவர்கள் விரும்பும் பொருளைத் தாமே எடுத்துச் செல்லும் அளவு எடுத்துச் செல்லலாம்" என்றான்.

மகளிர் கூடி எண்ணினர்.

மாநாடு கூட்டியோ பேச முடியும்?

மனத்தொடு மனமாய்ப் பேசினர்.

ஒவ்வொரு பெண்ணும் தலையிலோ முதுகிலோ ஒரு பொருளைச் சுமந்து கொண்டு சென்றனர். சுமைப் பொருள் கண்ட தலைவன் திகைத்தான். வீரர்களும் திகைத்தனர். தான் தந்த ஆணையை, மீறல் தகவன்று

என்றெண்ணித் தான் சொன்ன சொல்லைக் காத்தான். பகையிலும் பண்பு காத்தவன் அவன்.

மகளிர் என்ன கொண்டு சென்றனர்?

அவரவர் கணவன் மாரைச் சுமந்து சென்றனர்!

"நாங்கள் விரும்பும் பொருள் எங்கள் கணவரினும் உயர்ந்ததாக ஒன்றும் இல்லை" என்பதை மெய்ப்பித் தனர்.

அவர்கள் தம் கணவர்மேல் கொண்ட அன்பை அளக்க அளவு கோல் உண்டோ?

கற்பித்துத் தந்த கற்பா இது?

அவர்களே கற்பித்துக் கொண்ட கற்பு அல்லவா இது! உலகக் கற்பெலாம் ஒருருவாகத் திகழ்ந்த அவர்கள் கற்பன்றோ கற்பு!

பகைவரும் பாராட்டினர் அதனை எனின், பிறந்த மண் பெரிதும் பாராட்டடத் தவறுமா?

அந்நாள் தொட்ட பாராட்டு இந்நாள் வரை தொடருதல் கண்கூடு.

ஒவ்வோர் ஆண்டும் சனவரித் திங்கள் பத்தொன்பதாம் நாள்

பெல்சிய நாட்டில் '**பெண்டிர் விழா**' எனப் பெருவிழா நிகழ்தல் உலகறி செய்தி.

இத்தகு மகளிரை வள்ளுவத் தோன்றல் கண்டாரோ? என்னே என்னே என வியந்தாரோ?

***"பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்***
***திண்மையுண் டாகப் பெறின்?***

என விம்மிதமாய்ப் பாடினாரோ?

* * *

தட்டுத் தடுமாறி வந்தான்; தள்ளாடிக் கீழே விழுந்தான்.

விழுந்த இடமோ சாலையோரச் சாய்க்கடை.

ஓடிப்போய் ஒருவன் அவனைத் தூக்கினான்.

நினைவு இல்லை. ஆனால் மூச்சு இருந்தது.

அருகில் இருந்த கடைக்கு ஓடித் தண்ணீர் கொணர்ந்தான்.

முகத்தில் தெளித்தான்; கண்ணைச் சிறிது திறந்தான்.

தண்ணீர் தெளித்தவன் மீளவும் போய் தேநீர் வாங்கிவந்து குடிக்கச் செய்தான்.

நினைவு திரும்பி, நேரே பார்த்தான்.

உயர்ந்த கோபுரம் ஒன்று தெரிந்தது.

'என்ன அங்கே கூட்டம்?' என்றான்.

'கடிகாரம் ஓடிவில்லை; ஓடச் செய்ய முடியவில்லை." என்றான் தேநீர் தந்தவன்.

'எளிதாக ஓடவைப்பேன்' என்றான் மயக்கம் தெளிந்தவன்.

அவன் உடை! அவன் பட்ட சேறு! அவனுக்கே அருவறுப்பாக இருந்தது.

ஆயினும், ஆவலால் ஓடினான்; "என்னால் சீர்செய்ய முடியும்; முடியும்" என்று கத்தினான்.

மறுத்தவர் தாமும், வழியின்றி ஒப்பினர்.

ஐந்து மணித்துளி! கடிகாரம் 'டிக் டிக்' என அவன், மார்புத் துடிப்புப் போலவே ஓடியது.

பத்தாயிரம் தாலர் பரிசு!

ஏறத்தடுத்தவர் கொண்ட எழுச்சி, அவனை இறங்க விடாமல் தூக்கிக் கொண்டு வந்து கீழே விட்டது.

தண்ணீர் தெளித்தவன். மகிழ்வில் கண்ணீர் தெளித்தான்! "ஐயோ! மயங்கி வீழ்ந்த வேளையில் நானும் இல்லை என்றால்......

பெற்றோர் தந்த பிறப்பு முடிந்து போகும் நிலையில்

பின்னொரு பிறப்புத் தந்த **தாயுமானவன்** தண்ணீர் தெளித்தவன் தானே!

அவன் ஒரு குடும்பப் பொருளையோ காத்தான்?

உலகப் பொருளை அல்லவோ காத்தான்!

காக்கப்பட்ட அறிஞன் - அறிஞருள் அறிஞன் - **எடிசன்**!

அவன் உலகுக்கு அளித்த கொடை ஒன்றா இரண்டா?

உலகம் உள்ளவரை அவனை உலகம் மறக்குமா?

அவனுக்கு உதவியவன் செயல்,

காலத்தினால் செய்த நன்றிமட்டுமா?

செய்யாமல் செய்த உதவியும் அல்லவா!

பயன் தூக்கார் செய்த உதவியும் தானே!

ஒரு சான்று, முக்குறள் சான்றாகி விட வில்லையா?

ஞாலத்தின் மாணப் பெரிதாய், வையகத்திற்கும் வானகத்திற்கும் மாணப்பெரிதாய், கடலிற் பெரிதாய்ப்

பாராட்டத்தக்கவை ஆகிவிடவில்லையா? வள்ளுவக் காட்சி எத்தகு வான்பெருங் காட்சி!

* * *

குதிரையின் மேலே ஏறிவந்தான் ஒருவன்.

ஓட்டமானால் அப்படி ஓட்டம்.

அந்த ஓட்டத்தைத் தொடவும் முடியாமல் விடவும் முடியாமல்

மற்றொரு குதிரை மேலே ஒருவனும் வந்தான்.

வழியே வந்த ஒருவன், குதிரையில் வருபவனை அடையாளம் தெரிந்து

வழியை விட்டு ஒதுங்கி நின்றான்.

தலையில் இருந்த தொப்பியைக் கழற்றி, பணிவாய்க் குனிந்து

வணக்கம் செலுத்தினான்.

குதிரையில் வந்தவன் குதிரையை நிறுத்திக் கீழே இறங்கினான்.

வணங்கியவனுக்கு மேலாய்த் தொப்பியைக் கழற்றிப் பணிவாய் வணங்கினான்.

பின்னே வந்த குதிரையன் மெதுவாய்க் கேட்டான்;

“இப்படி இறங்கிப் பணிவாய், இந்த ஏழையை வணங்க வேண்டுமா?”

வணங்கிய நல்லோன் சொன்னான்;

“நாட்டின் தலைவன் நயக்கும் பணிவிலும் தலைவன்; பணிவால் இந்த ஏழை என்னை வெற்றி கொள்ள விடமாட்டேன்” என்றான்.

திகைத்து நின்றான் வினாவிய செருக்கன்!

அந்தப் பணிவுச் செல்வன், அனைத்து அதிகாரங் களையும் தன் கையிலே வைத்திருந்தும் அவற்றை அன்பு வழிக்கன்றிப் பிறவழிக்குப் பயன்படுத்தாத **அண்ணல் ஆபிரகாம் லிங்கன்;** அமெரிக்க நாட்டின் தலைவன்.

இத்தகு பணிவுத் தோன்றல் ஒருவனை வள்ளுவத் தோன்றல் கண்டிருப்பாரோ! அந்தப் பணிவிலே தோய்ந்து,

***"பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை***
***அணியுமாம் தன்னை வியந்து"*** (978)

என்று பாடியிருப்பாரோ?

* * *

காலில் கட்டி!

ஆறாத் தொல்லை! அறுவை செய்யப்பட்டது!

ஊன்று கோல் உதவியால், நடக்கத் தொடங் கினார்.

மாடியில் இருந்து தவறிவிழுந்து இடக்கை எலும்பு ஒடிந்தது.

மூன்று வாரங்கள் படுக்கையில் கழிந்தன.

மீண்டும் வீழ்ந்து கனுக்கால் எலும்பு ஒடிந்து போனது.

"மரக்கறி உண்பதால் நேர்வன இவை"யென மருத்துவர் கடிந்தார்.

"உயிரியைத் தின்று உயிர்வாழ்வதைவிட உயிரையே விடுவேன்" என்றார் நோயர்.

"மரக்கறி உண்பவர் நெடிது வாழார்" என்றார் மருத்துவர்.

"என் அகவை அளவு உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கும் புலவூண்காரர் ஒருவர் இருப்பின் காட்டுங்கள்" என்றார் அத்தொண்ணூறு அகவைக் கிழவர்; மரக்கறி ஊணர்!

அவர் தம் நண்பர்க்கு எழுதிய அஞ்சல் ஒன்றில் குறிப்பிட்டார்;

"என்னை ஒருநாள் அடக்கம் செய்யக் கொண்டு போக நேரும் அற்றை நாளில், அழகு வண்டிகள் ஆள்கள் தொடரல் வேண்டா; ஆடு மாடு பன்றி கோழி மந்தையாய் வரட்டும்;. துள்ளித் திரியும் மீன் தொட்டிகள் தொடரட்டும். இந்த உயிரிகள் எல்லாம் கருமையுடை போர்த்தப்படாமல் வெள்ளுடை போர்த்தி வரட்டும்.

"எங்களைக் கொன்று தின்று இன்னுயிர் வாழ் வதைக் காட்டிலும் என்னுயிர் விடவும் துணிவேன்" என்று வாழ்ந்தவன், இந்த மாந்தன்; என்று அவற்றின் போர்வையில் எழுதப்பட்டிருக்கட்டும். என்று எழுதி னார். அவர் அறிஞர் **பெர்னாட்சா.**

இத்தகு தெய்வ அருள்நெறி அண்ணலை, வள்ளுவ அந்தணர் கண்டனர் போலும்! அதனால்,

***"கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா***
***உயிரும்கை கூப்பித் தொழும்"***

என்றார் போலும்!

* * *

*எல்லை இன்றி, எங்கும் பரவி, என்றும் இருக்கும் பரம்பொருள் போன்றது அறம்! அவ் வறம் பாடிய ஒப்பிலா ஒருநூல் வள்ளுவம். ஆதலால், கால இடக் கணக்குக்கு ஆட்படாமல், அறம் போற்றும் இடம்கால மெல்லாம் தூண்டாமணி விளக்காய்த் துலங்கும் என்பது மெய்மையாம். வாழிய உலகளாவிய உயர் குறள்!*

❖❖❖❖



தமிழகம் அறிந்த தமிழறிஞர்.
மாணவர், இளைஞர், மற்றவர் என்று
அனைத்துத் தரப்பினர்க்கும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்.
தமிழ் என்றது தமிழத்தை.
அறிஞர்க்கும் அவரது நூல்கள் தேனடைகள்.
வள்ளுவத்தை வாழ்வியலாக்கித்
தமிழியத்தைத் தழைத்தோங்கச் செய்பவர்.
ஐம்பதாண்டுகளாய் அரும்பணியாற்றி
எழுபத்தைந்தில் நுழையும் இளைஞர்; ஓய்வறியா உழைப்பாளர்.
தமிழால் அவரும் அவரால் தமிழும் வளர்வது நம் பெருமை.
தமிழுக்கு எத்தனை முகங்கள்.
ஆயிரம் முகங்களில் ஐயா ஒருமுகம்;
தமிழ் வளர்க்கும் திருமுகம்.
தன்னைத் தாழ்த்திக்கொண்டு
அவரே அவரைப் 'புல்' என்றாலும்
அவர் புல் அல்லர்; புலி. தமிழ்ப்புலி
இலக்கியப் புலி; இலக்கணப் புலி
தமிழர் பற்ற வேண்டிய புளியங்கொம்பு
இளவழகன் பற்றியுள்ளார்.
தமிழ்மண் செழிக்கும்!

– ந. அரணமுறுவல்

எ4, மாதவ் குடியிருப்பு
5, டாக்டர் தாமசு சாலை
தியாகராயர் நகர்
சென்னை - 600 017

அமிழ்தம் பதிப்பகம்